தனியார் முதலீட்டிற்கு ஆதரவளிக்கின்ற நம்பிக்கையையும் நிலைமைகளையும் உருவாக்கும் நிலைபேறான மற்றும் உறுதியான வளர்ச்சி மற்றும் பொருளாதார மீட்சி காலப்பகுதிக்கு ஆதரவளிக்கின்ற ஒப்பீட்டளவில் சாதகமான பேரினப் பொருளாதார நிலைமைகளின் தொடர்ச்சியான தன்மை தேவைப்படும். இது தொடர்பில் தனியார் துறை கடன் வளர்ச்சியில் மீள்ஆரம்பம் மிகவும் சாதகமான அறிகுறியாகும்.

*வருமானம்*

2024 ஆம் ஆண்டில் 13.7 சதவீதமாக இருந்த மொத்த வருமானம் மற்றும் மானியங்கள் ஆகியவற்றினை 2025 ஆம் ஆண்டில் 15.1 சதவீதமாக அதிகரிக்க நடுத்தர கால நிதிக் கட்டமைப்பு எதிர்பார்க்கின்றது. இது அண்மைய மற்றும் திட்டமிடப்பட்ட மறுசீரமைப்புக்கள் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருமான சேகரிப்பு மற்றும் நிர்வாகத்தில் வலுவான முன்னேற்றங்களுடன் 2030 ஆம் ஆண்டில் படிப்படியாக 15.4 சதவீதமாக அதிகரிக்கும்.

**வரைபு 5 | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வருமானம்**




மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

2022 ஆம் ஆண்டின் நெருக்கடியின் போது, இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக வருமான விகிதம், உலகின் மிகக் குறைவான விகிதங்களில் ஒன்றாகக் குறைவடைந்தது. இந்த நிலைமையை மாற்றியமைக்கவும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக வருமான விகிதத்தை முன்னைய நிலைகளை நோக்கி கொண்டுசெல்லவும் குறிப்பிடத்தக்க கொள்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வரி நிர்வாகத்தில் மேம்படுத்தப்பட்ட செயல்திறனையும் வரி செலவினங்களைக் குறைப்பதற்கான குறிப்பிட்ட மறுசீரமைப்புக்களின் ஏற்பாடுகளையும் உத்தேசிக்கப்பட்ட மேல்நோக்கிய போக்கு பிரதிபலிக்கின்றது.

வருமானத்தில் இந்த நிலைபேறான உயர்வை வழங்குவது சவாலானதாக இருக்கும். எனினும், 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகள் முழுவதுமாக இடம்பெற்றுவரும் கொள்கை சீர்திருத்தங்களின் ஆழம் மற்றும் எதிர்பார்ப்புகளை விஞ்சிய சாதனைகள், இலக்குகள் அடையக்கூடியவை என்பதை மீள உறுதிப்படுத்துகின்றன.

*செலவினம் மற்றும் முதன்மை செலவின உச்சவரம்பு நிலை*

மொத்த செலவினம் ஆனது 2024 ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 20.5 சதவீதத்திலிருந்து 2030 ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 19.2 சதவீதமாக திட்டமிடப்பட்ட படிப்படியான குறைவு, வினைத்திறனான செலவின முகாமைத்துவம் மற்றும் தொடர்ச்சியான நிதித் திரட்டு முயற்சிகள் ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

மீண்டெழும் செலவினம் 2024 ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 17.9 சதவீதத்திலிருந்து 2026 ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 17.0 சதவீதமாகக் குறைவைடைந்து, மேலும் 2030 ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 14.9 சதவீதமாகக் குறைவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இது, வெற்றிகரமான கடன் மறுசீரமைப்பு, குறைந்த கடன் தேவைகள் மற்றும் மிகவும் சாதகமான நிபந்தனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் வட்டி செலவினம் 2024 ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 9.0 சதவீதத்திலிருந்து 2030 ஆம் ஆண்டில் அண்ணளவாக மொ.உ.உற்பத்தியின் 6.1 சதவீதமாகக் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றமையால் ஏற்படுத்தப்படும்.

உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் நீண்ட கால முதலீடுகளில் அரசாங்கம் வலுவான கவனம் செலுத்துவதற்கு ஏற்ப, மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் ஆகியவை 2024 ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 2.6 சதவீதத்திலிருந்து 2027 ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 4.0 சதவீதமாக அதிகரித்து 2030 ஆம் ஆண்டில் 4.3 சதவீதத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முதன்மை (வட்டி அல்லாத) செலவினம் 2024 ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 11.5 சதவீதத்திலிருந்து 2026 ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 12.9 சதவீதமாக அதிகரிக்கும் எனவும், புதிய நிதிப் பொறுப்புக்கூறல் கட்டமைப்பின் முதல் ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு இந்த மட்டங்களிலேயே காணப்படும்

எனவும், சட்டரீதியான உச்சவரம்பு ஆகிய மொ.உ.உற்பத்தியின் 13 சதவீதத்தை விட சற்று குறைவாக இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

*முதன்மை மீதி*

வருமானம் மற்றும் முதன்மைச் செலவினங்களுக்கான மேற்கூறிய எதிர்வுகூறல்களின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 2.3 சதவீத முதன்மை மிகை இலக்கு அடையப்பட்டு தொடர்ந்து பேணப்படும்.

வளர்ச்சி, பணவீக்கம் மற்றும் வருமானம் ஆகியவற்றின் குறுகிய காலக் கண்ணோட்டத்தைச் சுற்றியுள்ள நிச்சயமற்ற தன்மையைக் கையாள உதவும் வகையில் ஒரு சிறிய தாங்கல் சாதனத்தை உள்ளடக்க அரசாங்கம் தீரமானித்துள்ளதால், நடுத்தர கால நிதிக் கட்டமைப்பு எதிர்வுகூறல்களின் இலக்கை விட சற்று மேலே உள்ளன.

முதன்மைச் செலவினத்தை முதன்மை மீதி இலக்குடன் சரியாகப் பொருந்தக்கூடிய அளவை விட சற்று கீழே வைத்திருப்பதன் மூலம் இது ஏற்படுத்தப்படுகின்றது. அதாவது, நடைமுறையில் இலக்கை அடைவதற்கான சாத்தியத்தை அதிகரிக்க, சற்று வலுவான முதன்மை மீதியை வேண்டுமென்றே இலக்காகக் கொண்ட கொள்கை அமைக்கப்படும். அவதானிக்கப்பட்ட விளைவுகளின் அடிப்படையில், எதிர்கால ஆண்டுகளில் இந்த தாங்கல் சாதனத்தின் சில மறுசீரமைப்பு பொருத்தமானதாக இருக்கலாம்.

எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி (IMF-EFF) நிகழ்ச்சித்திட்டக் காலப்பகுதியின் மீதமுள்ள 2027 வரையிலும், நடுத்தர கால எதிர்வுகூறல் காலம் 2030 வரையிலும் இலக்கை பூர்த்தி செய்ய வேண்டும் என்பதே எதிர்வுகூறல்கள். பொதுப் படுகடனின் மிகக் குறைந்த மட்டங்களை அடையும் வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 2.3 சதவீத ஆரம்ப மிகையை இலக்காக தொடர அரசாங்கம் தற்போது திட்டமிட்டுள்ளது.

*அரசிறை மீதி*

வட்டிக் கொடுப்பனவுகளில் எதிர்பார்க்கப்படும் குறைவு மற்றும் அரசாங்கத்தின் நிதிக் கொள்கைகளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதன் மூலம், 2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.8 சதவீதமாக காணப்பட்ட வரவு செலவுத்தட்ட பற்றாக்குறை 2026 ஆம் ஆண்டில் 5.6 சதவீதமாகக் கணிசமாகக் குறைவடைந்து, 2030 ஆம் ஆண்டில் 3.7 சதவீதமாக மேலும் மேம்படுத்தப்படும்.

இந்த விரிவான அணுகுமுறை நிதி நிலைபேற்றுத்தன்மையை மீட்டெடுப்பதையும், இலங்கைப் பொருளாதாரத்தை நிலையான வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு நிலைநிறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

*பொதுப் படுகடன்*

இலங்கையின் பொதுப் படுகடனுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் அண்மைய எதிர்வுகூறல்கள், 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அண்ணளவாக 119.2 சதவீதத்திலிருந்து 2030 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 94.5 சதவீதமாகக் குறைவடைவதைக் காண்கின்றன. இது 2032 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95 சதவீதமாக இருந்த ஆரம்ப இலக்கிற்குக் கீழே கடன் குறைவதற்கு இசைவானது. ஆரம்ப மீதி இலக்கு மற்றும் முதன்மை செலவின உச்சவரம்பைப் பின்பற்றுவது, பெரியளவிலான வெளிப்புற அதிர்ச்சிகள் இல்லாத நிலையில் இந்த இலக்கை அடைவதற்கு ஆதரவளிக்கும்.

## 4. நிதி செயல்நுணுக்கத்தை அடைவதற்கு ஆதரவளிக்கும் குறிப்பிட்ட கொள்கை நடவடிக்கைகள்

2022 ஆம் ஆணடின் நெருக்கடிக்கு அதன் தொடர்ச்சியான துலங்கலின் ஊடாக, வருமான அடிப்படையிலான நிதித் திரட்டு நடவடிக்கைகள் உட்பட, அரசாங்கம் திருத்திய பேரினப் பொருளாதாரக் கொள்கைகளை கீழே விபரித்துள்ளவாறு மற்றும் இணைப்பு II இல் விரிவாக விளக்கப்பட்டுள்ளவாறு அமுல்படுத்தியுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிதி இலக்குகளை அடைய உதவும் வகையில் இந்தக் கொள்கை மறுசீரமைப்புக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில், இலங்கை அதன் பேரினப் பொருளாதார நிலப்பரப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய தொடர்ச்சியான நிதித் திரட்டல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இந்த நடவடிக்கைகள் கீழே விபரித்துக் காட்டப்பட்டுள்ளபடி பொருளாதாரத்தை உறுதிப்படுத்தவும், பொதுப் படுகடனை நிர்வகிக்கவும், நிலைபேறான வளர்ச்சியை ஊக்குவிக்கவும், அதிக நேர்மறையான விளைவுகளை ஈட்டவும் உதவியுள்ளன.

- தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளாக பதிவுசெய்யப்பட்ட பொருளாதாரச் சுருக்கத்தைத் தொடர்ந்து 2024 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக மீண்டது. இது 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட வலுவான வருடாந்திர வளர்ச்சியாகும். இந்த வருடாந்த நேர்மறையான போக்கைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பொருளாதாரம் 4.8 சதவீதத்தால் வளர்ச்சிடைந்துள்ளது

- கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணால் (CCPI) அளவிடப்படும் ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம், செப்தெம்பர் 2022 இல் வரலாற்று ரீதியாக மிக உயர்ந்த உச்சமான 69.8 சதவீதத்தை எட்டியது. எனினும், பணவீக்கத்தை நிலைப்படுத்துவதற்கான முயற்சிகள் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டன. பணவீக்க விகிதம் ஜூலை 2023 இல் ஒற்றை இலக்க அளவை எட்டியதுடன் அன்றிலிருந்து அந்த மட்டத்தில் காணப்படுகின்றது. பணவீக்கம் எதிர்மறையான நிலையை அடைந்து, மே 2025 இல் காணப்பட்ட -0.5 ஐ மறுகுறியீடு செய்து செப்தெம்பர் 2024 இல -0.7 ஐ எட்டியது.

- நிதி ஒழுங்கு மற்றும் விவேகமான முகாமைத்துவம் ஆகியவை நிதித்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுக்கு

வழிவகுத்தன. 2024 ஆம் ஆண்டில் ரூபா 650 பில்லியன் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.2 சதவீத ஆரம்ப மிகை பதிவாகியுள்ள அதே நேரத்தில் ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.8 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. இது அரசாங்க வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பால் உந்தப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 532.7 பில்லியன் ஆரம்ப மிகை பதிவாகியுள்ளது.

- 2024 ஆம் ஆண்டில் மானியங்கள் உட்பட மொத்த அரசாங்க வருமானம் ரூபா 4,000 பில்லியனைத் தாண்டியது. கணிசமான பெயரளவு அதிகரிப்புக்கு இணையாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மானியங்கள் உட்பட அரசாங்க வருமானம் 2023 ஆம் ஆண்டின் 11.2 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 13.7 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மொத்த வருமானம் மற்றும் மானியங்கள், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.9 சதவீதமாக காணப்பட்டது.

- வெளிவாரித் துறையைப் பொறுத்தவரை, சுற்றுலா வருமானத்தில் கூர்மையான அதிகரிப்பு, தொழிலாளர் பணம் அனுப்புதலில் நிலையான அதிகரிப்பு மற்றும் ஒட்டுமொத்த வெளிவாரித் துறை ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் காரணமாக, 2024 ஆம் ஆண்டில் இலங்கை 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் நடப்புக் கணக்கு மிகையை பதிவு செய்து நேர்மறையான உந்துதலை அனுபவித்தது.

- மத்திய வங்கி உள்நாட்டில் வரலாற்று உச்சமான அந்நியச் செலாவணியை கொள்வனவு செய்தமையாலும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பன்முகத்தன்மை நிறுவனங்களிலிருந்தான பெறுகைகளாலும் 2025 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் மொத்த அதிகாரப்பூர்வ இருப்பு கணிசமாக 6.3 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

- நடப்புக் கணக்கு மிகை மற்றும் உள்நாட்டு அந்நியச் செலாவணி சந்தையில் அந்நியச் செலாவணியின் நிலையான தேறிய உட்பாய்ச்சல் காரணமாக, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 12.1 சதவீதமாக காணப்பட்ட வருடாந்த உயர்வுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 10.7 சதவீத வருடாந்த உயர்வைப் பதிவு செய்து, தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக நாணய மாற்று விகிதம் அதிகரித்துள்ளது.

இந்த மைல்கற்களை அடைய, இலங்கை அரசாங்கம் பல்வேறு கொள்கை நடவடிக்கைகள் மற்றும் கட்டமைப்பு மறுசீரமைப்புக்களை அமுல்படுத்தியிருந்தது. வரி இல்லாத வரம்பெல்லையைக் குறைத்தல், வரி விகிதங்களைத் திருத்துதல் மற்றும் பெருநிறுவன வருமான வரி விகிதங்களை அதிகரித்தல் போன்ற வரிக் கொள்கைகளில் ஏற்படுத்திய மாற்றங்கள் இதில் உள்ளடங்கும். கூடுதலாக, பெறுமதிசேர் வரி விகிதங்கள் மற்றும் மது வரிகளில் சீரமைப்புக்கள் போன்றன வருமான வளர்ச்சி மற்றும் நிதித் திரட்டலுக்கு பங்களித்தன.

வருமான மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்கு இணங்க, நடுத்தர காலத்தில் செலவினப் பகுப்பாய்வு நடவடிக்கைகளும் நிலைபேறுபடுத்தப்படும். இதில் தற்போதைய அரசுடைமை தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்பு மற்றும் முதலீட்டு குறைப்பு செயல்முறையின் விளைவாக அரசுடைமை தொழில்முயற்சிகள் மற்றும் பிற அரச நிறுவனங்களுக்கான மாற்றல்களைக் குறைத்தல், பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தினால் ஆதரவளிக்கப்படும் வளர்ச்சித் திட்டங்களில் விவேகமான முதலீடுகள், பொதுத்துறை ஊழியர்களின் எண்ணிகையை பகுத்தாய்வு செய்தல் ஆகியவை அடங்கும்.

மேலும், செலவினங்களைக் கட்டுப்படுத்தவும், காசுப்பாய்ச்சல் முகாமைத்துவத்தை மேம்படுத்தவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் நிதிச் செயலாற்றுகையை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தன. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையின் குறிப்பிடத்தக்க பகுதி உள்நாட்டு மூலங்களிலிருந்து நிதியளிக்கப்பட்டதன் மூலம் அரசாங்கம் அதன் காசுப்பாய்ச்சலை வெற்றிகரமாக முகாமைசெய்தது.

# பகுதி II

# நிதி இடர் கூற்று - 2026

## 1. அறிமுகம்

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 11(ஊ) ஆம் பிரிவின் கீழ் 10ஆம் பிரிவில் குறித்துறைக்கப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்கும் அத்தகைய நிதி அல்லது அரசிறை இடர்களை மதிப்பிடுவதற்கும் அரசிறை இடர்களின் முக்கிய மூலங்களை குறித்துரைப்பதற்கு நிதி செயல்நுணுக்கக் கூற்று வேண்டப்பட்டுள்ளது. பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் கீழ் வெளியிடப்பட வேண்டிய அத்தகைய முதலாவது நிதி இடர் கூற்று இதுவாகும்.

இலங்கையின் சனத்தொகை, பொருளாதாரம், அரசிறை மற்றும் நிதியியல் நிலை என்பன இயற்கை அனர்த்தங்கள், 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கொவிட்-19 நோய்த்தொற்று மற்றும் 2022 இல் தோற்றம்பெற்ற ஆழமாக வேரூன்றிய, பல்கோணங்களை கொண்ட சமூகப் பொருளாதார நெருக்கடி உள்ளடங்கலாக அண்மைய ஆண்டுகளில் அதிர்வுகள் மூலம் மிகவும் தாக்கம் செலுத்தப்பட்டு வருகின்றன.

ஓட்டுமொத்தமாக, இடர் மட்டங்கள் உயர்வடைந்து காணப்படுகின்றன ஆயினும் படிப்படியாக குறைவடைகின்றன. இலங்கையின் கடன்கொடுனர்களுடனான வெற்றிகரமான படுகடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் உள்ளடங்கலாக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் விரிவான கொள்கை முயற்சிகள் மற்றும் அனைத்து அபிவிருத்தி பங்காளர்களினதும் ஆதரவு என்பன இதற்கு காரணமாக அமைகின்றன.

அரசிறை பொறுப்புடைமைக்கான எமது சமகால அணுகுமுறையானது வெளிப்படைதன்மை மீது உருவாக்கப்பட்டுள்ளது.

அரசாங்கமானது தற்போது திட்டவட்டமான இலக்குகளை தாபிப்பதற்கு வேண்டப்பட்டுள்ளது. இது அரசிறைக் கொள்கைக்கான மற்றும் 5 வருட அரசிறை திட்டமிடல் வீச்சில் நீடிக்கின்ற உட்பொதிந்துள்ள இடர்நேர்வை முகாமைசெய்தவற்கான அதன் அணுகுமுறைக்கு வழிகாட்டும் இலக்குகளை நிர்ணயிக்கையில் இவற்றுடன் இணங்கி நடப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னேற்றம் பாராளுமன்றத்தினால் உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றது.

இதன் அர்த்தம் ஒவ்வொரு ஆண்டும் தொடர்புடைய இலக்குகள் உண்மையில் அடையப்படுகின்றனவா அத்துடன் முன்னோக்குகின்ற விதத்தில் அவை யதார்த்தமாக காணப்படுகின்றனவா என்பது பற்றிய உள்ளடங்கலாக குறிக்கோள் மிக்கதாகவும் முன்னேற்றம் பற்றிய நேர்மைமிக்கதாகவும் இருப்பதாகும். வேண்டப்படுமாயின், பரிகார கொள்கை பதிலிறுத்தல்கள் உருவாக்கப்பட வேண்டும்.

பொருளாதாரத்தை மற்றும் வரவுசெலவுத் திட்ட உறுதிப்பாட்டை மீளமைப்பதில் அண்மைய ஆண்டுகளில் பல தீர்க்கமான படிமுறைகளை இலங்கை எடுத்துள்ளதுடன் எதிர்காலத்தில் மீட்சி மற்றும் புத்தாக்கம் பெற்ற நம்பிக்கை என்பவற்றுக்கான வலுவான தளங்களை உருவாக்கியுள்ளது. தொடர்ச்சியான அவதானம் வேண்டப்படுவதுடன் இவ்வண்மைய அடைவுகளை திரட்டுவதற்கும் இடர்களை மேலும் அடிமட்டத்திற்கு கொண்டு செல்லுவதற்கும் மேலதிக முன்னேற்றம் அடையப்பெற வேண்டும்.

தற்கால முயற்சிகளின் பெறுபேறுகள் உறுதியான வளர்ச்சி, அபரிமிதமான வாய்ப்புகள், மிகுந்த கொள்கை நெகிழ்வுத் தன்மை என்பவற்றுடன் வரவிருக்கும் தலைமுறைகள் மூலம் அனுபவிக்கப்படும். மிகவும் உறுதியான மற்றும் குறைவான இடர் மிக்க அரசிறை நிலையானது குறிப்பாக உறுதியான படுகடன் குறைப்பு பொது முதலீடுகள் உள்ளடங்கலாக ஏனைய முன்னுரிமைகளுக்கு அரிதான மூலவளங்களை விடுவிக்கும்.

நிதி இடர் கூற்றானது நவீன அரசிறை ஆளுகைளின் இன்றியமையாத கூறாகும். இடர்களின் செயற்பரப்பு காலப்போக்கில் நீடிக்கப்படும் என்பதுடன் பகுப்பாய்வின் விரிவும் நவீனமும் வளர்ச்சியடையும். கணிப்பீடானது ஆற்றல்வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதுடன் துரிதமாக மாற்றமடைகின்ற உலகுடன் இணைந்து செல்ல வேண்டும்.

## 2. நிதி இடர்கள்

நிதி அல்லது அரசிறை இடர்கள் என்பது அரசிறை நிலைமையை எதிர்கூறல்கள் மற்றும் எதிர் பார்க்கைகளில் இருந்து விலகிச் செல்வதற்கு காரணமாக கூடிய காரணிகள் ஆகும்.

அரசிறை இடர்களை மதிப்பீடு செய்வதானது வருவாய்கள் அல்லது படுகடனும் அவற்றின் மதிப்பிடப்பட்ட மட்டங்களில் இருந்து முக்கியமாக வேறுபடுத்துவதற்கு எதிர்பாராத செலவுகளை தோற்றுவிக்கின்ற அல்லது காரணமாகின்ற சாத்தியமான அதிர்வுகளின் அல்லது நிகழ்வுகளின் தன்மையினை கருத்திற் கொள்கின்றது.

இலங்கையின் பின்னணியினை பொருத்தவரை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொளாதார அதிர்வுகள், அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் செயலாற்றம், அரசாங்க தனியார் பங்குடைமையில் இருந்து வரும் இடர்கள், வெளிநாட்டு செலாவணி வீதங்களிலும் வட்டி வீதங்களிலும் எதிர்பாராத அசைவுகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களின் தாக்கங்கள் என்பன கடந்த அண்மைக்காலத்தில் அரசிறை பெறுபேறுகளில் எதிர்பாராத மாற்றங்களை விளைவித்த இடர் வகைகளின் முக்கிய உதாரணங்காக அமைந்துள்ளன.

இம்மூலங்களில் இருந்து தோன்றுகின்ற அரசிறை இடர்கள் இவ்வாவணத்தில் பின்வரும் பிரிவுகளில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. 2022 பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி வலிமையடைகின்ற போதிலும் இலங்கை மேலும் அதிர்வுகளுக்கு பாதிக்கப்படத்தக்கதாகவே காணப்படுகின்றது. இவை தவிர்க்க முடியாதவையாக இருக்கின்ற போதும் அவற்றை நன்கு புரிந்து சிறப்பாக முகாமைசெய்யப்படலாம்.

மேலும் அதிர்வுகள் எதிர்கொள்ளப்படும் என்றும் ஆயினும், ஒட்டுமொத்த இடர் மட்டங்களும் குறைவடைந்து இருக்கும் விதத்தில்

மதிப்பிடப்படுகின்றன என்பது ஊக்குவிக்கப்படுகின்றது என்பதை அனுமானிப்பது முன்மதிமிக்கதாகும்.

அரசிறை இடர் மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளதுடன் வருடாந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு, மிகவும் தாக்குபிடிக்கத்தக்க தேசமாக இடம்பெற செய்யக் கூடிய கொள்கைக்கான ஒட்டுமொத்த நிலைமையிலுள்ள மாற்றங்களையும் பங்களிப்புகளையும் அளவிடுவதற்கு சாத்தியமாக்கும்.

இவ்வாவணத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் பற்றிய தொகுப்பொன்று தரவு வரைபடத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

நிதி இடர் முகாமைத்துவக் கூற்றின் எதிர்கால பாதிப்புகளின், உள்ளடக்கமானது நிதியியல் துறை, காலநிலை மாற்றம் துணைத் தேசிய அரசாங்கங்கள் மற்றும் சட்ட ரீதியான கோரிக்கைகள் என்பவற்றிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான இடர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

### கண்டறியப்பட்டவைகள் பற்றிய தொகுப்பு

| | | நிகழ்வதற்கான சாத்தியப்பாடு | | |
|---|---|---|---|---|
| | | குறைந்த சாத்தியம் (<10%) | சாத்தியம் (10-50%) | மிகவும் சாத்தியம் (>50%) |
| சாத்தியமான அரசிறை தாக்கம் | உயர்வு (மொ.உ.உ. இல்1% <) | | | பேரண்டப் பொருளாதாரம் |
| | நடுத்தரம் (0.1- மொ.உ.உ. இல் 1%) | | அரசுடைமை தொழில் முயற்சிகள் கடன் உத்தரவாதங்கள் மற்றும் கடன் பெறுதலிலிருந்து கடன் வழங்கல் | இயற்கை அனர்த்தங்கள் |
| | குறைவு (மொ.உ.உ.இல்0.1% >) | | அரச தனியார் பங்குடைமை | |

### 3. எதிர்பார்க்கப்படும் அரசிறை அழுத்தங்கள்

உலக வங்கியின் அபிவிருத்தி இற்றைப்படுத்தலிலிருந்து வரும் அண்மைய தரவுகள் (2025 ஏப்ரல்) நாடு எதிர்கொள்கின்ற பரந்த பொருளாதார சவால்களை எடுத்துக்காட்டுகின்றது. பேரண்டபொருளதார குறிகாட்டிகள் மீட்சி சமிக்ஞைகளை காண்பிக்கின்ற அதேவேளை வீட்டலகு வருமானம், தொழில், பாதிக்கப்படத்தக்க வகுப்பினரின் வாழ்க்கைத்தரம் என்பன நெருக்கடிக்கு முந்திய மட்டங்களுக்கு மிகவும் கீழ் காணப்படுகின்றன. நாளொன்றுக்கு ஆள் ஒருவருக்கு ஐ.அ.டொ. 3.65 கொண்ட கொள்வனவு சக்தி சமநிலை அடிப்படைஅளவில் அளவிடப்பட்ட வறுமை வீதம் 2024 இல் 24.5 சதவீதமாக இருந்து விடாப்பிடியான சமூக ரீதியான பாதிக்கப்படும் தன்மைகளை எடுத்துகாட்டுகின்றது.

இச்சமூக பொருளாதார அழுத்தங்கள் பாதிக்கப்படும் சனத்தொகைக்கு ஆதரவளிப்பதற்கு சமூகப் பாதுகாப்பு வலைகள் மீது உயர்வான எதிர்கால அரசாங்க செலவிடல் சாத்தியபாட்டை அதிகரிக்கின்றன. அதேவேளை துரிதமாக வளர்ச்சியடைகின்ற முதியோர் சனத்தொகை ஓய்வூதியத்தையும் முதியோர் ஆதரவுக் கொடுப்பனவுகளையும் மேலும் தூண்டி, அரசிறை அழுத்தங்களை மேலும் இறுக்கமாக்குகின்றன. இது தீர்க்கப்படாவிடின் பங்களிப்பற்ற ஓய்வூதிய முறைமை, உயர்வடைகின்ற சமூகபாதுகாப்பு தேவைகள் மற்றும் குடித்தொகைசார் மாறுதல்கள் என்பவற்றின் ஒன்றிணைந்த தாக்கம் நடுத்தர காலம் தொடக்கம் நீண்ட காலத்தில் அரசிறை நிலைபெறுதன்மைக்கு கணிசமான இடர் ஒன்றை தோற்றுவிக்கும்.

### 4. பிரதான நிதியிடர் மூலங்கள்

#### அ. பேரண்டப்பொருளாதார நிச்சயமின்மையிலிருந்து தோன்றுகின்ற நிதி இடர்

பொருளாதார நிலைமைகள், அரசிறை பெறுபேறுகளின் முக்கிய நிர்ணயமாக விளங்குகின்றது. இருந்தும் வழமையாக அவை அரசிறை நிலைமை பற்றிய எதிர்வுகூறல்களை சூழ்ந்திருக்கின்ற நிச்சயமின்மை பற்றிய முக்கிய மூலமாகவும் காணப்படுகின்றன. உலக சந்தைகள், பண்ட விலைகள் மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கை என்பவற்றில் தளம்பல் உண்மையான வருவாய் மற்றும் செலவின பெறுபேறுகள் எதிர்வுகூறல்களிலிருந்து குறிப்பிடத்தக்களவு விலகிச்செல்வதற்கு காரணமாகலாம்.

எடுத்துகாட்டாக எதிர்பார்க்கப்பட்டதையும் விட நலிவான செயற்பாடு அல்லது குறைவான விலைகள் காரணமாக வரிக்கிடைப்பனவுகள் எதிர்பார்ப்புக்களை விட குறைவடையக்கூடிய அதேவேளை அனர்த்தம்

அல்லது அதிர்வொன்று ஏற்படும் அவசரகால பதிலிறுத்தல் அல்லது சமூக உதவி போன்ற எதிர்பாராத செலவின அழுத்தங்களின் போது துரிதமாக தோற்றம் பெறலாம்.

பணவீக்கம், வட்டி வீதங்கள் மற்றும் செலாவணி வீதங்கள் போன்ற கடன்பெறுதல் செலவினங்களையும் அரசிறை நிலைபெறுதன்மையினையும் நேரடியாக பாதிக்கின்ற ஏனைய மாறிலிகள் தளம்பல்மிக்க மற்றும் முன்கணிப்புச் செய்யாத பொருளாதார சக்திகள் மூலம் அதேபோன்று செல்வாக்குச் செலுத்தப்படக்கூடியவை.

நிச்சயமின்மையும் எதிர்வுகூறல் பிழைகளும் யதார்த்தமானவை என்பதை அங்கீகரிப்பது தாக்குப்பிடிக்கத்தக்க மற்றும் ஏற்றதாகிக் கொள்ளும் அரசிறைக் கொள்கையை வகுப்பதற்கு அத்தியவசியமானதாகும். ஏதேனும் பொருளாதாரத்தைப் போன்று இலங்கையும் சாத்தியமான அதிர்வுகளுக்கு பாதிக்கப்படும் தன்மைகளைக் கொண்ட அதற்கேயுரிய தனித்துவமான தொகுதியைக் கொண்டுள்ளது.

நாட்டின் ஒப்பீட்டளவில் ஒடுங்கிய ஏற்றுமதித் தளமும் சுற்றுலா, பணியாளர் பணம் அனுப்புதல்கள் மற்றும் எரிபொருள் இறக்குமதிகள் மீது மிதமிஞ்சித் தங்கியிருப்பதும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு இடையூறுகள் இரண்டுக்கும் அதன் பாதிக்கப்படும்தன்மைகளை அதிகரிக்கின்றன. இலங்கையின் புவியியல் சார்ந்த அமைவிடம் அது சில இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாவதை அதிகரிப்பதாக எண்ணப்படுவதுடன் இறுதியாக காலநிலை மாற்றத்திடமிருந்து சமவிகிதமற்ற தாக்கங்களை விளைவிக்கக் கூடியது.

2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள், கொவிட்-19 நோய்த்தொற்று, பாரிய வறட்சி மற்றும் வெள்ளப் பெருக்குகள், சக்தி விலைத் தளம்பல்கள் உள்ளடங்கலாக பல கடுமையான அதிர்வுகள் அனுபவிக்கப்பட்டன. இவை அனைத்தும் உள்நாட்டுப் பொருளாதாரத்தை ஆழமாகப் பாதித்தன.

அரசிறைப் பெறுபேறுகள் எதிர்பார்க்கைகளிலிருந்து விலகிச் செல்வதற்கு காரணமாகக் கூடிய காரணிகள் உள்ளடக்குவன:

- வரவுசெலவுத்திட்டத்தில் முன்வைக்கப்பட்ட நடுநிலை எதிர்வுகூறல்களில் ஒன்றில் இடம்பெறவே மாட்டாது என்ற அல்லது புறக்கணிக்கப்பட்டிருந்து உருவாகிய முக்கிய அரிதான நிகழ்வுகள் அல்லது "தீவிரமான இடர்கள்"
- கொள்கைகளின் தாக்கம் பற்றிய தீர்மானங்கள் உள்ளடங்கலாக பொருளாதார எதிர்வுகூறல்கள் தயாரிக்கப்படும் போது பின்பற்றப்படுகின்ற மாதிரிகளில் அல்லது தீர்மானங்களில் பிழைகள் அல்லது பக்கச்சார்பு, மற்றும்
- எதிர்வுகூறப்பட்டதிலிருந்து வேறுபட்ட பெறுபேற்றை உருவாக்குகின்ற கொள்கை மாற்றங்கள் (புதிய உதாரணமாக செலவின நிகழ்ச்சித்திட்டமொன்று அல்லது புதிய வரிக்கொள்கையொன்று உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாவிடின்)

இந்நிச்சயமின்மை மூலங்கள் அரசிறைச் செயலாற்றத்தில் எவ்வாறு தாக்கம் செலுத்தலாம் என்பதனை எடுத்துக்காட்டுவதற்கு கடந்த தசாப்தத்தில் இலங்கைக்கான முக்கிய பொருளாதாரம் மற்றும் அரசிறை எதிர்வுகூறல் பற்றிய செம்மையினை இப்பிரிவு ஆராய்கின்றது. நடுத்தரகாலத்தில் எறிவு செய்யப்பட்ட அரசிறை பெறுபேறுகள் மீதான முக்கிய தாக்கத்தை விளைவிக்கக் கூடிய முக்கிய நிச்சயமின்மை மூலங்களையும் இது கலந்தாராய்கின்றது.

**எதிர்வுகூறல் செயலாற்றுகை பற்றிய பகுப்பாய்வு**

**பேரண்டப் பொருளாதார எதிர்வுகூறல்கள்**

பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த அளவுபற்றிய எதிர்வுகூறல்கள் உறுதிப்பாடு மிக்க காலங்களில் நன்கு செயலாற்றுவதற்கு முனைகின்றது. ஆயினும் முக்கிய மாறுதல் நிலைகளை முன்கணிப்புச் செய்வதற்கு தவறலாம். உண்மையில் 2015-2019 வரையிலான காலப்பகுதி முழுவதும் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி பற்றிய தொடர்ந்துவந்த வரவுசெலவுத்திட்ட எறிவுகள் இலங்கைப் பொருளாதாரத்தின் அளவை சிறியளவாக குறைத்து முன்கணிப்பதற்கு முனைந்தன (வரைபடம் 6).

உணவுப் பண்டங்கள், உலகளாவிய சக்தி விளைவுகளில் குறிப்பிடத்தக்க விலை உயர்வுகள், இலங்கை ரூபாவின் சடுதியான தேய்மானம் மற்றும் கடந்த சில ஆண்டுகளாக நாணய தளர்வின் காலம்கடந்த தாக்கம் காரணமாக திரண்ட கேள்வி, அனர்த்தங்கள் என்பன உள்ளடங்கலாக நிரம்பல் பக்க இடையூறுகளால் தூண்டப்பட்ட 2022 காலப்பகுதியில் நிகழ்ந்த பணவீக்கத்தில் சடுதியான உயர்வானது தெளிவாக எதிர்நோக்கப்படாதவொன்றாக இருந்தது. இவ் அதிர்விலிருந்து இரு ஆண்டுகளில் பணவீக்கம் எதிர்பார்த்ததை விடவும் விரைவாக மிதமடைந்தது. இதனால் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி உண்மையில் அது எறிவுசெய்யப்பட்டிருந்ததைவிட ஏதோவொரு வகையில் சிறிதாக இருப்பதாக உணரப்பட்டது. நடுத்தரகால எறிவுகளுக்கான தொடர்ந்துவந்த திருத்தங்களில் இது எடுத்துக்காட்டப்பட்டது.

2019, 2020 மற்றும் 2022 களில் தொடர்ச்சியான அதிர்வுகள் (முறையே 2019 உயிர்த்த ஞாயிறுத்தாக்கங்கள், கொவிட்-19 மற்றும் பொருளாதார அத்துடன் படுகடன் நெருக்கடி) என்பன இவ்வாண்டுகளுக்கான தொடர்புடைய வரவுசெலவுத்திட்ட எதிர்வுகூறல்களுக்கு நன்குகீழ் சென்ற மெய் மொத்த உள்நாட்டு வளர்ச்சியுடன் 2018 இலிருந்து ஏற்கனவே மெதுவடைந்திருந்த பொருளாதாரமொன்றின் மீது அமைந்திருந்தது. (வரைபடம் 7). 2022 இன் போது மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுருக்கம் எதிர்பார்க்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2020 இல் அவதானிக்கப்பட்ட கொவிட்-19 தாக்கத்தினை விடவும் பெரிதாகக் காணப்பட்டது. 2024 இல் அவதானிக்கப்பட்ட 5.0 சதவீத மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 2023 இன் பிந்திய பகுதியில் வரவுசெலவுத்திட்ட எதிர்வுகூறல் தயாரிக்கப்பட்ட போது ஆரம்ப எதிர்வுகூறலில் மீட்சி வேகத்தின் இரு மடங்கிற்கு மேல் காணப்பட்டது.

## பேரண்டப் பொருளாதார எதிர்வுகூறல் செயலாற்றுகை

### வரைபு 6 | பெயரளவு உள்நாட்டு உற்பத்தி




மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம் (எறிவுகள்), தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### வரைபு 7 | மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி




மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம் (எறிவுகள்), தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

கடந்த தசாப்தத்தில் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான சராசரி எறிவு ஏறத்தாள 5.5 சதவீதம் கொண்ட குறைவான முன்கணிப்பாகவிருந்தது. இத்தசாப்த சராசரி பிழையின் ஏறத்தாள 2.5 சதவீத புள்ளிகள் 2022 இல் மாத்திரம் பணவீக்க அதிர்வுக்கு அடையாளப்படுத்தப்படக் கூடியதாகும்.

2017 இல் இருந்தான காலப்பகுதி மீது தளம்பல் மிக்கதாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கான எதிர்வுகூறல்கள் உண்மை வளர்ச்சியை 2.5 சதவீதம் கொண்ட சராசரி மூலம் மிகைத்து முன்கணிப்புச் செய்ய முனைந்தன. மீண்டும், 2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், கொவிட்-19, 2022 பொருளாதார நெருக்கடி என்பவற்றின் தாக்கங்கள் இவ்விலகலில் முக்கிய தூண்டுதல்களாக இருக்கின்றன.

## அரசிறை எதிர்வுகூறல்கள்

### *வருவாய்*

மொத்த வருவாய்க்கான இதையொத்த எதிர்வுகூறல் பகுப்பாய்வு கடந்த தசாப்தத்தின் அநேகமான காலப்பகுதிக்கு வருவாயை மிகைத்து முன்கணிப்புச் செய்வதில் தெளிவான முனைப்பு காணப்பட்டது (வரைபடம் 8).

இது அநேகமாக ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் அளவை எதிர்வுகூறுவதில் பிழைகள் காரணமாகவன்றி ஒருபோதும் இடம்பெறாத பொருளாதாரத்தின் பாரிய பங்கினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மீண்டும் மீண்டும் வருவாயினை எதிர்வுகூறுகின்ற நோக்கில் தொடர்ச்சியான பக்கச்சார்பாகவிருந்ததுடன் அத்தகைய மிகையான மதிப்பீடு சில கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தாமையினையும் பிரதிபலித்தது. சராசரியாக கடந்த தசாப்தத்தில் தொடர்ந்துவந்த வருவாய் எறிவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.2 சதவீதம் கொண்ட சார்பான பக்கச்சார்பை வெளிப்படுத்தின.

கடந்த இரு ஆண்டுகளில் இப்பக்கச்சார்பு சரிசெய்யப்பட்டு, 2023 மற்றும் 2024 இற்கான மொத்த விளைவுகள் விரிவான வரிக் கொள்கை வழிமுறைகள் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்திற்கான வருவாயில் குறிப்பிடத்தக்க உயர்வுடனும்கூட வரவுசெலவுத்திட்ட எதிர்வுகூறலுக்கு இசைவாக அல்லது விஞ்சிக்காணப்பட்ட மொத்த வருவாய் தசாப்தத்தைவிட அதன் அதிகூடிய மட்டங்களுக்குத் திரும்பி மூன்று ஆண்டுகளுக்கு சராசரி எதிர்வுகூறல் பிழை. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.1 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

### வரைபு 8 | மொத்த வருவாய் மற்றும் கொடைகள்




மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

### வரைபு 9 | மொத்த செலவினம்




மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

**வரைபு 10 | முதன்மைச் செலவினம்**




மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

***செலவினம்***

மொத்த செலவினத்திற்கான எறிவுகள் மிகவும் நிலையாக இருக்க முனைந்துள்ளதுடன் பொதுவாக ஒன்றில் வட்டிக் கொடுப்பனவுகளுடன் இணையப்பட்ட மாறிலிகளுடன் கூடிய எதிர்வுகூறுதலுக்கு இசைவாக அல்லது குறைவான பெறுபேறளிக்கின்றது. வரவுசெலவுத்திட்ட நிறைவேற்றமானது போக்கினைப் வரவுசெலவுத்திட்ட இலக்குகளுடன் பரந்தளவில் பேணும் விதத்தில் குறைவாகச் செயலாற்றுகின்ற வருவாய்களுக்கு ஈடளிப்பதற்கு, கொடைகள் கிடைக்கப்பெறுவதற்கு மற்றும் நிதி மூலங்களுக்கு ஆண்டினுல் முகாமைசெய்யப்பட்டுள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில் அநேகமான சுமை சீராக்கமானது மூலதனச் செலவினம் மீது மீள்வதற்கு முனைகிறது.

2021 தொடக்கம் ஆரம்பச் செலவினங்களின் உள்ளமைப்பு மாறுபாடுகளுக்கு மத்தியில் தொடர்புடைய வரவுசெலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட கட்டமைப்பினுள் பேணப்பட்டுவருகின்றன. உதாரணமாக 2023 மற்றும் 2024 இல் மூலதன நிறைவேற்றமானது எதிர்வுகூறலைவிட குறிப்பிடத்தக்களவு குறைவாகவிருந்தது.

***வரவுசெலவுத்திட்ட மீதியும் ஆரம்ப மீதியும்***

ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்ட மீதிக்கான எதிர்வுகூறல்கள் அநேகமாக கடந்த தசாப்தத்தில் எதிர்பார்க்கப்பட்டதையும் விட நலிவான பெறுபேற்றை அளித்தலுடன் மேலே கலந்துரையாடப்பட்ட காரணிகளில் தேறிய தாக்கங்களை எடுத்துக்காட்டுகின்றது (வரைபடம் 11). சராசரியாக கடந்த 10 ஆண்டுகளில் வரவுசெலவுத்திட்ட மீதியானது 2019 மற்றும் 2022 இற்கிடையில் தொடர்ந்துவந்த அதிர்வுகளின் போது அவதானிக்கப்பட்ட பாரிய விலகல்களுடன் கூடிய எதிர்வுகூறலைவிட நலிவான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வெறும் 1 சதவீதத்திற்கு மேல் காணப்பட்டது. 2022 தொடக்கம் எதிர்வுகூறல் செயலாற்றுகை குறிப்பிடத்தக்களவு மேம்பாட்டு, சராசரி எதிர்வுகூறல் பிழை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 0.3 சதவிதமாகவிருந்தது. மேலும் எதிர்வுகூறல் செயலாற்றுகையில் அண்மைய இம்மேம்பாட்டுக்கு வருவாய் எதிர்வுகூறல்களில் பக்கச்சார்வு தீர்க்கப்பட்டமை பிரதான காரணமாக அமைந்தது.

**வரைபு 11 | வரவு செலவுத்திட்ட வருடாந்த அரசிறை மீதி எதிர்விளைவுகள்**




மூலம் அரசிறை கொள்கைத் திணைக்களம்

**வரைபு 12 | முதன்மை மீதி**




மூலம் அரசிறை கொள்கைத் திணைக்களம்

செலாவணி வீதங்கள் மற்றும் வட்டி வீதங்கள் இரண்டிலும் அசைவுகளை பிரதிபலிக்கின்ற வட்டி செலவுகளை உள்ளடக்காத ஆரம்ப மீதியானது (வரைபடம் 12) எதிர்வுகூறுவதற்கு மிகவும் கடினமாக இருக்க முனைகின்றது. ஆரம்ப மீதிக்கான 10 ஆண்டுச் சராசரி எதிர்வுகூறல் பிழையானது மொத்த உள்நாட்டு உறபத்தியின் 0.3 சதவீதம் கொண்ட மியான மதிப்பீடாகும். சில ஆண்டுகளில் மிகை மதிப்பீடுகள் ஏனையவற்றின் குறைவான மதிப்பீடுகள் மூலம் சமநிலைப்படுத்தப்பட்டுள்ளன. 2022, 2023, 2024 ஆகிய ஒவ்வொரு ஆண்டுக்கும் ஆரம்ப மீதி விளைவு தொடர்புடைய வரவுசெலவுத் திட்டங்களில் எதிர்வுகூறலை விட வலுவானதாக இருந்துள்ளது.

**உணர்திறன் மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு**

மேலுள்ள கலந்தாராய்வு எடுத்துகாட்டுவதைப் போன்று எதிர்பாராத பொருளாதார நிகழ்வுகள் வரவுசெலவுத்திட்ட நிலை மீது முக்கிய சுமையை கொண்டிருப்பதுடன் அரிதான அதிர்வுகளின் தன்மையும் மற்றும் வன்மையையும் முழுமையான மதிநுட்பத்துடன் முன்கணிப்பு செய்வதற்கு சாத்தியமற்றதாக காணப்படுகின்றன.

எதிர்வுகூறல் செயலாற்றுகை பற்றிய கிரமமான மதிப்பீடானது மேற்கொள்ளப்பட்ட ஏதுவாகவிருக்கின்ற ஊகங்களை உறுதிப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் உதவுகின்றது. ஏதுவாகின்ற மாதிரிகளையும் அலுவலர்களின் இயலளவுகளையும் தரமுயர்த்துவது அரசிறை இடர்களை முகாமைசெய்வதில் இன்றியமையாத கூறொன்றாக காணப்படுகின்றது.

பொருளாதார மாறிலிகளில் காணப்படும் மாற்றங்களுக்கும் அத்துடன் மேலதிக மாற்றுவழி சூழ்நிலைகளை கொண்டு நடுநிலை எதிர்வுகூறல்களை குறைநிரப்புச் செய்வதற்கும் அரசிறை எதிர்வுகூறல்கள் பற்றிய உணர்திறனை கருத்திற் கொள்கின்ற மேலதிக பகுப்பாய்வினை நிதி இடர் கூற்றீன் எதிர்கால பதிப்புகளில் எடுத்துரைக்க அரசாங்கம் முனைகின்றது.

**நடுத்தர காலத்தில் சாத்தியமான இடர் மூலங்களும் நிச்சயமின்மையும்**

பல போட்டியிடுகின்ற காரணிகள் பற்றிய பலவகையான தீர்மானங்களை சமநிலைபடுத்துகின்ற நடுநிலைச் சூழ்நிலையை வரவுசெலவுத் திட்ட எதிர்வுகூறல்கள் எடுத்துரைக்கின்றன. வரவிருக்கும் ஐந்து ஆண்டுகளில் பொருளாதாரம் மற்றும் அரசிறை மீது சுமையை கொண்டிருக்ககூடிய மிகவும் குறிப்பிடத்தக்க காரணிகளில் சில உள்ளடக்குவன.

- புவிசார்அரசியல் உறுதியின்மை – பல பிராந்தியங்களுக்கிடையிலுமான முறன்பாடுகளின் தன்மை மற்றும் அளவு பற்றிய தற்போது இடம்பெறுகின்ற நிச்சயமின்மை மற்றும் தாக்கங்கள். உலகளாவிய வளர்ச்சி மற்றும் எண்ணப்பாங்கு, மூலதனச் சந்தைகள், வார்த்தக பாய்ச்சல்கள், சக்தி விலைகள் என்பன மீது இது தாக்கத்தை கொண்டிருத்தல்.
- வார்த்தக கொள்கை பிரச்சினைகள் - ஐக்கிய அமெரிக்க வர்த்தக கொள்கை தொடர்பிலான நிச்சயமின்மை மற்றும் இது உலகளாவிய வர்த்தக பாய்ச்சல்கள் மற்றும் பணவீக்கம் மீது மிகவும் பொதுவான தாக்கங்களுடன் இணைந்து இலங்கையின் ஏற்றுமதி துறைகள் மீது தாக்கத்தை கொண்டிருக்கலாம்.
- குடிசன மாற்றம் - வெளிநோக்கிய புலம்பெயர்தல், குறைவடைகின்ற திருமணம் மற்றும் பிறப்பு வீதங்கள் என்பற்றின் அண்மைக்கால போக்குகள் இலங்கையில் தொடர்ந்து இடம்பெறுமா, இது பொருளாதார வளர்ச்சி வீதத்தை குறைக்க செயவதற்கு முனையலாம் அல்லது மற்றுவழியாக பொருதார வளர்ச்சியினை மேம்படுத்தலாம். உறுதிப்பாடு மற்றும் நம்பிக்கை மீள்வதால் திரும்பல் சமிக்ஞைகளை அவை காண்பிக்கின்றன.
- 2022 பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி அடையும் வேகம் - எதிர்பார்த்தததை விட விரைவாக அல்லது அமதுவாக இது காணப்படலாம் என்பதனை வளர்ந்துவரும் சந்தைகள் அல்லது நிதியியல் சந்தைகள் என்பவற்றின் எண்ணபாங்கு மீது தாக்கம் ஏற்டபடுத்துகின்ற வெளிவாரி நிகழ்வுகள் மூலம் பாதிக்கப்படலாம்.

**பேரண்ட அரசிறை இடர்களை முகாமைசெய்வதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடக்கைகள்**

அரசாங்கமானது உறுதிப்பாட்டை மீளமைப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதுடன் பொருளாதாரத்திற்கும் அரசிறை நிலைமைக்குமான முக்கிய இடர்களை முகாமைசெய்வதற்கு உதவுவதற்கு தொடர்ந்தும் முக்கிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

நிதி செயல் நுணுக்கக் கூற்றில் விளக்கப்பட்டவாறு அரசிறை கொள்கையின் முதன்மை நோக்க அரசாங்கப் படுகடனை நிலைபெறத்தக்க மட்டங்களுக்கு குறைப்பதாகும். நாடு அதிர்வுகளுக்கான ஒட்டுமொத்த பாதிக்கப்படும் தன்மையினை இது குறைத்து, மாற்றுவழி உபயோகங்களுக்கு மூலவளங்களை விடுவித்து எதிர்காலத்தில் மிகுந்த கொள்கை நெகிழ்வு தன்மையினை வழங்கும்.

வியாபார முதலீட்டுக்கு மற்றும் தனியார்துறை வளர்ச்சிக்கு சாதகமான நிலைமைகளை உருவாக்குவதற்கு பரந்த கட்டமைப்பு சார்ந்த மறுசீரமைப்புகளை நாடிச்செல்வதற்கு அரசாங்கம் பாடுபடுகின்றது. பரந்த அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சி மற்றும் உற்பத்திதிறனை உயர்த்துவதில் கவனம்செலுத்துதல் என்பன இலங்கையின் பொருளாதார உள்ளார்ந்த ஆற்றலை அடைவதிலும் வருமானத்தின் மிதப்பாற்றலை எதிர்காலத்திற்கும் உறுதிசெய்வதற்கு முக்கியமானதாக அமைந்திருக்கும்.

பொருளாதார எதிர்வுகூறலுக்கும் அரசிறை இடர்களை கண்காணிப்பதற்கும் நிதி அமைச்சு அதன் ஒதுக்கப்பட்ட தொழில்நுட்ப இயலளவுகளையும் மூலவளங்களையும் மேம்படுத்துகின்றது. பேரண்ட அரசிறை பிரிவு 2021 இல் தாபிக்கப்பட்டதுடன் அபிவிருத்திப் பங்களார்களின் ஆதரவுடன் புதிய எதிர்வுகூறல்கள் கருவிகள் உருவாக்கப்பட்டுவருகின்றன.

உத்தியாகபூர்வ எதிர்வுகூறல்களின் நுண்ணாய்வை அதிகரிப்பதற்கும் காலப்போக்கில் அவற்றின் செம்மை மேம்படுத்தல்களுக்கு வழிவகுப்பதற்கும் அரசிறை இடரின் பரந்த பகுப்பாய்வின் பாகமாக எதிர்வுகூறல்களின் செயலாற்றுகை பற்றிய வருடாந்த மதிப்பீடு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| தொகுப்பு மதிப்பீடு: நிகழத்தக்க, உயர்வான சாத்தியமான தாக்கம் | தரப்படுத்தல் |
|---|---|
| இலங்கைப் பொருளாதாரம் மீது பேரண்டப் பொருளாதார அதிர்வுகள் ஒப்பீட்டளவில் இயல்பான நிகழ்தகவுடன் தாக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படக்கூடும். (வரவிருக்கும் 5 ஆண்டுகளில் 50 சதவீதத்திற்கு மேல் நிகழக்கூடியது) அத்தகைய அதிர்வுகளின் தன்மையும் கடுமையும் முன்கணிப்புச் செய்வதற்கு கடினமானவை ஆயினும் கடந்தகால நிகழ்வுகளைப் போன்று அரசிறை நிலைமை மீது முக்கிய தாக்கம் ஒன்றினை உடனடியாக ஈடுபடுத்தக்கூடும். (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு சதவீதத்தைவிட அதிக தாக்கம்). அத்தகைய அதிர்வுகளுக்கு பாதிக்கப்படக்கூடிய தன்மை முனைப்புடன் முகாமைசெய்யப்பட்டு குறைக்கப்பட்டு வருகின்றன. சில நெகிழ்வுத் தன்மையினை உருவாக்குவதற்கு குறிப்பிடத்தக்க படுகடன் குறைப்பு மற்றும் மேலதிக தாங்கு இருப்புகள் அத்துடன் அரசிறை உபாயத்தின் இலக்குகினைக் கண்காணிப்பதற்குத் தேவையான கொள்கை பதிலிறுப்புகளை நடைமுறைப்படுத்தல் என்பவற்றை இடர் தணிப்பு உபாயங்களை உள்ளடக்குகின்றன. |  |

**ஆ. அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளிலிருந்து தோன்றுகின்ற நிதி இடர்கள்**

பல்வேறு காரணங்களுக்காக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிடமிருந்து அரசிறை இடர்கள் தோன்றலாம்.

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொழிற்பாட்டு இடர்நேர்வை எதிர்கொள்வதுடன் அவற்றின் இலாபத்தன்மை மற்றும் கடன்தீர்ாற்றல் என்பவற்றைப் பாதிக்கக்கூடிய பரந்த சந்தை சக்திகளுக்கு ஆட்படுகின்றன.

சில அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் சந்தைத் தோல்விகளை தீர்ப்பதற்கு கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான போதுமான ஈடளிப்பின்றி அரசாங்கம் சார்பில் இடர்களை ஏற்பதற்கு (வேறு அரசாங்க நிறுவனங்களால் அரசிறைச் செயற்பாடுகளை பொறுப்பேற்றல் என அறியப்படுகின்றது) வேண்டப்படலாம். இது வர்த்தக ஆதாயங்களை ஈட்டுவதற்கான அவற்றின் இயலுமையைப் பாதிக்கலாம்.

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அடிக்கடி மூலதன செறிவுமிக்க துறைகளில் நீண்டகால முதலீடுகளை மேற்கொள்கின்றன. இதனால் குறிப்பிடத்தக்க படுகடன் மட்டங்களைக் கொண்டிருந்து இலாபங்கள் வீழ்ச்சியடையுமாயின் பாதிக்கப்படும் தன்மையினை உருவாக்குகின்றன.

அரசாங்க ஒழுங்குபடுத்தலும் கொள்கைத் தீர்மானங்களும் வர்த்தக ரீதியான நிறுவனங்களின் இலாபத்திலும் கடன்தீர்ாற்றலிலும் நேரடியாக தாக்கம் செலுத்தலாம் (உதாரணம்- விலைகளாக இருப்பின் அவை ஒழுங்குமுறைப்படுத்தலை பொறுப்பாக்கலாம்).

இறுதியாக அரசாங்கம் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்படும் ஏதேனும் நிதியியல் ஆதரவுடன் (உதாரணம் - உதவுதொகைகள் அல்லது படுகடன் உத்தரவாதங்கள்) ஒன்றுசேர்த்து அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிடமிருந்து அவை பெறுகின்ற வரி மட்டங்களை, பங்கிலாபங்களை மற்றும் ஏனைய வருமானத்தை தீர்மானிக்கலாம்.

**இலங்கையின் முக்கிய அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் பற்றிய பொதுநோக்கு**

இலங்கைப் பொருளாதாரத்தில் அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சி நிறுவனங்கள் முக்கியமான நிலையை அனுபவிக்கின்றன.

- 41 வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், 40 அரசாங்கத்துக்கு சொந்தமான கம்பனிகள் மற்றும் 197 நியதிச்சட்ட சபைகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற ஏறத்தாள 350 அரசாங்க கூட்டுத்தாபனங்கள் காணப்படுகின்றன.
- அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அவற்றுக்கே உரிய தனியான சட்ட அந்தஸ்த்துக்களை (வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள்) கொண்டிருக்கலாம் அல்லது கம்பனிச் சட்டத்தினால் ஆளப்படலாம். (அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகள். அவை ஒன்றில் அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது அநேகமாக முழுமையாக உரிமை கொள்ளப்பட்டுள்ளன).
- 151 அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் நிதிசாரா துறைகளில் தொழிற்படுவதுடன் 11 நிதிசார் துறை நிறுவனங்களாகும்.

- நியதிச்சட்ட சபைகள் பொதுவாக நேரடியான வரவுசெலவுத்திட்ட நிதியிடலுடன் வர்த்தகம்சாரா செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. அவற்றின் தொழிற்பாடுகள் மட்டுப்பட்ட அரசிறை இடர்களை தோற்றுவிப்பதற்கு முனைகின்றன.

இலங்கையின் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சித்துறைகள் பற்றிய பின்வரும் பகுப்பாய்வு 52 மிகவும் உபாய ரீதியாக முக்கியத்துவம் மிக்க தொழில்முயற்சிகளை (41 நிதியல்லாத்துறை மற்றும் 11 நிதிசார் துறை) பற்றி குறிப்பிடுகின்றது.

நிறுவனங்கள் பற்றிய துணைத்தொகுதி உபாய ரீதியாக முக்கியத்துவம் மிக்கவற்றை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கருதப்படுவதுடன் அரசாங்கம் மூலம் மிகவும் விரிவான மேற்பார்வைக்குட்படுத்தப்பட்டதுடன் முக்கிய அரசிறை இடர்களை எடுத்துரைக்கக் கூடியனவுமாகும்.

### வரைபு 13 | அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சித்துறை பற்றிய நோக்கு

**துறைவாரியாக 52 அரசுடைமை தொழில் முயற்சிகள்**




**மொத்தச் சொத்துக்களில் அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் பங்கு**




**நிதிசாரா அரசுடைமை தொழில்முயற்சிகளின் புரள்வு**




**நிதிசாரா அரசுடைமை தொழில்முயற்சிகளின் புரள்வு**




**நிதிசாரா அரசுடைமை தொழில்முயற்சிகளின் இலாபத்தன்மை**




**நிதிசாரா அரசுடைமை தொழில்முயற்சிகளின் இலாபத்தன்மை**




மூலம் : அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்

## நிதியியல் செயலாற்றுகை

இலங்கையின் உபாய ரீதியாக முக்கியத்துவம் மிக்க அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் செயலாற்றுகையானது அநேகமாக நிதிசாரா துறையில் குறிப்பிடப்பட்ட தாக்கங்களுடன் அண்மைய நெருக்கடி முழுவதும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

மொத்தமாக 41 நிதிசாரா அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் 2020 தொடக்கம் 2022 வரை தொடர்ச்சியான நட்ட ஆண்டுகளைப் பதிவுசெய்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாள 3.5 சதவீதம் கொண்ட ஒன்றுதிரண்ட தொழிற்பாட்டு நட்டங்களை அடைந்தன. குறிப்பிடத்தக்க மறுசீரமைப்பு மற்றும் சீராக்கங்கள் தற்போது இடம்பெற்று 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டில் இலாபத்தை அதிகரிக்கும் விதத்தில் துறை மீண்டுள்ளது. 2024 இல் 41 நிதிசாரா அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி தொழில்முயற்சிகளில் 24 நிறுவனங்கள் இலாபங்களைப் பதிவுசெய்ததுடன் 17 நிறுவனங்கள் நட்டங்களைப் பதிவு செய்தன. (2023 இல் 13 இல் இருந்து அதிகரிப்பு) கடந்த 5 வருட காலப்பகுதியில் துறைக்கு குறிப்பிடத்தக்க வரவுசெலவு ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

அதே காலப்பகுதியின் 11 அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் (6 வங்கிகள் மற்றும் 1 நிதி 4 காப்புறுதி வழங்குனர்கள்) மொத்தமாக இலாபகரமாக காணப்பட்டனர். மொத்த இலாபத்தன்மை 2022 நெருக்கடியினால் குறிப்பிடத்டதக்களவு பாதிக்கப்பட்டது ஆயினும், வங்கித் தொழில்துறையில் வலுவான செயலாற்றத்தின் மூலம் தூண்டப்பட்டு அப்போதிலிருந்து மேல் நோக்கிய போக்கை எடுத்து காட்டியது. காப்புறுதி துறையின் நிலைமைகள் முதலீட்டு வருமானத்தில் தளம்பல் மூலம் தூண்டப்பட்டு மிகவும் சவால்மிக்கனவாக காணப்படுகின்றன. அரசுக்குச் சொந்தமான நிதி நிறுவனங்களின் அரசாங்கத்திற்கான கடன்அளவுகளும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி படுகடன் மறுசீரமைப்பும் முக்கியமாக இருந்து வந்து 2024 இல் இரு அரச வங்கிகளுக்கும் வரவுசெலவத்திட்ட ஆதரவு வழங்கப்பட்டது (கீழே பார்க்க). 11 நிதிசார் துறை அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் ஒன்று 2024 இல் நட்டத்தை பதிவு செய்தது.

### வரவுசெலவுத்திட்ட தாக்கங்கள்: அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிதுறை

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் வரி, அறவீடுகள் மற்றும் பங்குலாபங்கள் என்ற அவற்றின் கொடுப்பனவு வாயிலாக வரவுசெலவுத்திட்டத்திற்குப் பங்களிக்கின்றன. தொழிற்பாடுகளிலிருந்து இலாபங்களை ஈட்டுகின்ற நன்கு செயலாற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி துறை காலப்போக்கில் அரசாங்கத்திற்கு தேறிய நிதியியல் பங்களிப்புகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கலாம். இலாபமடைகின்ற செயற்பாடுகளுக்காக அவற்றுக்கு உதவுதொகை அளிப்பதற்கு அல்லது வேறு வகையில் அவற்றின் நிதியியல் வளம்பெறும் தன்மையினை உறுதிசெய்வதற்கு அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு அரசாங்கம் நிதியியல் பங்களிப்புக்களை செய்யலாம்.

**வரைபு 14 | நிதிசாரா அரசுடைமை தொழில் முயற்சிகள் - அரசாங்கத்திற்கான தேறிய காசுப்பாய்ச்சல்**




மூலம் : அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்

**வரைபு 15 | நிதிசார் அரசுடைமை தொழில் முயற்சிகள் - அரசாங்கத்திற்கான தேறிய காசுப்பாய்ச்சல்**




மூலம் : அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்

நிதிசாரா அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரியாக 0.4 – 0.5 சதவீதம் அரசாங்கத்திடம் இருந்து பொதுவான பங்பளிப்புடன் அண்மைய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க தொடர்ச்சியான வரவுசெலவத்திட்ட ஆதரவை வேண்டியிருந்தன. 2023 இல் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.0 சதவீதமாக இரட்டிப்படைந்தது.

நிதிசார் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் 2022 நெருக்கடியின் அழிவின் பின்னர் மிகவும் இக்கட்டான காலப்பகுதியில் இருந்து மீண்டு மொத்தமாக அவற்றின் பாதிக்கப்படும் தன்மைகள் குறைவடைந்து இருப்பதாக தென்படுகின்றது. ஒட்டுமொத்த சொத்துபட்டியலினுள் உயர் இடரிலுள்ள குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான நிறுவனங்கள் காணப்படுவதுடன் முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்புகளும் சீராக்கமும் வேண்டப்படக் கூடியதாகவிருக்கும்.

அரசிறை இடர்க் அறிக்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி ஆரோக்கியப் பரிசோதனைக் கருவியினைப் பயன்படுத்தி 41 நிதிசாரா துறை அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் இடர் தரப்படுத்தல் குறித்தொதுக்கப்படுவதற்கும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் சொத்துப்பட்டியல் ஆரோக்கியம் அக்காலத்திற்கு மதிப்பிடப்படுவதையும் இது இயலச்செய்யும். 11 நிதிசார் துறை நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கி மற்றும் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

மூலமான சுயாதீன முன்மதிமிக்க மேற்பார்வைக்கு ஏற்கனவே உட்படுத்தப்பட்டுள்ளன. இப்பகுப்பாய்வில் அவை ஏன் உள்ளடக்கப்படவில்லை என்பதை இது விளக்குகின்றது.

**இடர் தணிப்பு வழிமுறைகள்**

கடந்த இரு ஆண்டுகளாக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தொழிற்பாட்டு செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கும் பாதிக்கப்படும் தன்மையினைத் தீர்ப்பதற்கும் அரசாங்கத்தினால் குறிப்பிடத்தக்க கொள்கை மறுசீரமைப்புகள் பின்பற்றப்பட்டுவருகின்றன. கவனம செலுத்தும் துறைகள் உள்ளடக்குகின்றன:

- செலவு பிரதிபலிப்பு விலையிடல் கொள்கை
  - மின்சாரம் மற்றும் எரிபொருள் விலைகள் செலவு மீட்பு கோட்பாடுகளின் அடிப்படையில் மறுசீரமைக்கப்பட்டன.
  - உண்மையான சேவைச் செலவுகளை விலையிடல் பிரதிபலிப்பதை உறுதி செய்வதற்கு நீர்க்கட்டணச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- நிதியியல் நிலை மறுசீரமைத்தல்
  - முக்கிய அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நீண்டகால படுகடன்களை அரசாங்கத்தின் நிதி நிலைக்கு மாற்றுதல்.
  - அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் தொடர்புடைய அரசாங்க நிறுவனங்கள் மத்தியில் இடையிலான பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்தல்.
- நிறுவனசார் மேம்படுத்தல்கள்
  - 52 முக்கிய அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் ஆளுகை மற்றும் தொழிற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன.
- மின்சாரத்துறை மறுசீரமைப்பு
  - 2024 இன் 36 ஆம் இலக்க மின்சாரச் சட்டம் பின்வருவனவற்றுக்காக சட்டமாக்கப்பட்டது.
    - இலங்கை மின்சார சபைக்கு அதிகரித்த தொழிற்பாட்டு மற்றும் நிதியியல் சுயாட்சியினை வழங்குதல்.
    - பிறப்பாக்கம், கடத்தல், விநியோகம் என்பவற்றில் தனியார்துறை பங்கேற்பை அனுமதித்தல்.
    - வினைத்திறன், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் என்பவற்றைப் மேம்படுத்தல்.
  - மின்சாரச் சட்டத்திற்கான திருத்தங்களை மீளாய்வதற்கும் முன்மொழிவதற்கும் நிபுணத்துவக்குழு நியமிக்கப்பட்டது.
- பெற்றோலியத்துறை தாராளமயமாக்கல்
  - சந்தைச் செயற்பாட்டாளரின் எண்ணிக்கை 2023 இன் 3 இல் இருந்து 2024 இல் 5 ஆக அதிகரிக்கப்பட்டது.
  - போட்டியை அதிகரிக்கவும் உற்பத்தித்திறனை ஊக்குவிக்கவும் நோக்கமாகக் கொண்ட மறுசீரமைப்பு.
- ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸை மறுசீரமைத்தல்
  - திருத்தப்பட்ட தொழிற்திட்டம் 2024 டிசெம்பரில் அனுமதிக்கப்பட்டது (தனியார் மயமாக்காது).
  - மாற்றுவழி மறுசீரமைப்பு மாதிரிகளை அரசாங்கம் ஆராய்கின்றது.
- நீர்வழங்கல்துறை மறுசீரமைப்பு
  - நீர்க்கட்டணக் கொள்கை மற்றும் சூத்திரம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது.
  - தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நிறுவன முன்மொழிவுக் அறிக்கை 2024 யூலையில் கைச்சாத்திடப்பட்டது.
  - நிறுவன முன்மொழிவுக் அறிக்கை கண்காணித்தலுக்கான முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளை உள்ளடக்குகின்றது.
- அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மறுசீரமைப்புக் கொள்கை
  - அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு பிரிவின் செயற்பாடுகள் ஒட்டுமொத்த மறுசீரமைப்பின் முடிவுறாத மீளாய்வு மற்றும் அனுமதியினை தாமதப்படுத்தியது.

| தொகுப்பு மதிப்பீடு : சாத்தியம், நடுத்தர சாத்தியத் தாக்கம் | தரப்படுத்தல் |
| --- | --- |
| இலாபத்தன்மையினை அதிகரித்து படுகடன் இடர்களை குறைவடையச் செய்த அண்மைய கொள்கை மாற்றங்களுக்கு மத்தியில் வரவிருக்கும் 5 ஆண்டுகளில் மேலதிக வரவுசெலவுத்திட்ட ஆதரவை வேண்டுகின்ற இலங்கையின் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மிதமான இடம்பெறக்கூடிய தன்மை காணப்படக்கூடியது. இவ்விடர் உருப்பெறுமாயின் வரவுசெலவுத்திட்ட எதிர்பார்க்கப்பட்ட தாக்கம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.5 – 1.0 சதவீத வீச்சினுள் இடம்பெறும். இவ்விடர் நேர்வுகளைத் தணிப்பதற்கான உபாயங்கள், ஒழுங்குபடுத்தல் மறுசீரமைப்புகள் ஊடாக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் இலாபத் தன்மையினை மேம்படுத்தல், முகாமைத்துவத்தையும் ஆளுமையையும் நவீனமயப்படுத்தல். உயர் இடர் நேர்வுகளுடன் கூடிய நிறுவனங்களை மறுசீரமைப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றது. |  |

### இ. பொதுப்படுகடன், உத்தரவாதங்கள் மற்றும் கடன்பெறுதலிலிருந்து கடன்வழங்கல் என்பவற்றிலிருந்து தோன்றுகின்ற நிதி இடர் நேர்வுகள்.

மீண்டெழும் பற்றாக்குறைகளுக்காக அரசாங்கம் நிதியிடலுக்கு படுகடன் வழங்குதல். அரசாங்க முதலீடுகளுக்காக நிதி திரட்டுதல் அல்லது அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், மாகாண அரசாங்கங்கள் அல்லது உள்ளூராட்சி சபைகள் மூலம் திரட்டப்படுகின்ற உத்தரவாதக் கடன்கள், ஆகியவற்றின் பின்னணியில் அரசிறை இடர்கள் தோன்றுகின்றன. கடன் சுமையின் ஒட்டுமொத்த அளவும் அரசிறை இடர் அடங்கலாக வரலாற்று அரசிறை செயலாற்றுகையின் தொழிற்பாடு ஒன்றாகக் காணப்படுகின்றது.

அரசாங்கமானது ஏனைய காரணிகளுக்கு மத்தியில் தவணைக் கட்டமைப்பு, கடன்பெறுதல் உள்நாட்டு நாணயத்திலா அல்லது வெளிநாட்டு நாணயத்திலா மேற்கொள்ளப்பட வேண்டும் அத்துடன் வட்டி வீதங்கள் நிலையானதா மாறுபடத்தக்கதா என்பன உள்ளடங்கலாக அவை திரட்டுகின்ற படுகடனை சொத்துபட்டியல் கட்டமைப்பு பற்றி தெரிவுகளை மேற்கொள்கின்றன. இச்சொத்துப்பட்டியல் தெரிவுகள் கடன்பெறுதலின் ஒட்டுமொத்த செலவுகள் மற்றும் இடர்களை சமநிலைப்படுத்தும் பின்னணியில் செய்யப்படுகின்றன.

ஏனைய அரசாங்க நிறுவனங்கள் சார்பில் அல்லது உத்தரவாதம் அளித்து கடன்பெறுகின்றபோது அவசியப்படின் அவற்றின் படுகடனை மீள் கொடுப்பனவு செய்வதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு வாக்குறுதியளிப்பதன் மூலம் இந்நிறுவனங்களின் சில இடரினை அரசாங்கங்கள் உள்ளார்ந்தமாக பொறுப்பேற்கின்றன.

**படுகடன் குறைப்பு**

இலங்கையின் அதியுயர்வான பொதுப்படுகடன் மட்டங்களிலிருந்து இடர்களையும் பாதிக்கப்படும் தன்மையினையும் குறைப்பது 2026 அரசிறை உபாயக்கூற்றிலும் பல்வேறு நிகழ்ச்சித்திட்ட ஆவணங்களிலும் விபரிக்கப்பட்டவாறு சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதி நிகழ்ச்சித்திட்டத்தின் மையக் கவனமாக இருந்துவருகின்றது. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை மீளமைப்பதற்கும் இலங்கை பொதுப்படுகடனை மறுசீரமைப்பதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இலங்கையின் நிலைபேறான படுகடன் பாதையை மீளப்பெறுவதில் ஏதுவாக இருந்தது என்பதை நிரூபிக்கப்படும்.

2032 அளவில் பொதுப்படுகடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 95 சதவீதத்திற்கு கீழ் குறைக்கும் குறிக்கோள் சரியான பாதையில் இருக்கின்றது என பிந்திய எறிவுகள் சுட்டிக்காட்டுகின்றன (வரைபடம் - 16). அரசிறை உபாயம் விபரிப்பது போன்று உறுதியான படுகடன் குறைப்பானது மிகவும் குறைந்த அத்துடன் பாதுகாப்பான மட்டங்களை அடைவதற்கும் கொள்கை நெகிழ்வுத்தன்மையை மீள் அமைப்பதற்கும் பல ஆண்டுகளை வேண்டி இருக்கும்.

சர்வதேச நாணய நிதியத்தின் படுகடன் நிலைபெறுதன்மை பகுப்பாய்வு ஏற்கனவே காணப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக நடாத்தப்பட்டு கிரமமாக இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது. படுகடன் நிலைபெறுதன்மை பகுப்பாய்வினை நடாத்துவதற்கும் நிதி அமைச்சானது உள்ளக இயலளவுகளை உருவாக்குகின்றதுடன் இது ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும்.

படுகடனைக் குறைக்கும் குறிக்கோள் தவிர்ந்த படுகடன் நிலைபெறுதன்மை தொடர்பிலான முக்கிய இலக்குகளில் ஒன்று வருடாந்த மொத்த நிதியிடல் தேவை (புதிய கடன்பெறுதலுடன் சேர்த்து மீள் நிதியிடலை சமாளிப்பதற்குத் தேவையான படுகடன் தொகை) முகாமைசெய்யத்தக்கதாக காணப்படுவதை உறுதி செய்வதாகும். சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கையின் உடன்படிக்கை 2027–32 காலப்பகுதியில் சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதத்திற்குக் கீழ் இது இருக்க வேண்டும் என்பதை உறுதிசெய்வதாகும். இலக்குக்கு சற்று கீழ் வருகின்ற எறிவு செய்யப்பட்ட 12.7 சதவீதம் கொண்ட சராசரியுடன் இவ் இலக்கை

அவதானிப்பதற்கு இலங்கை எதிர்பார்க்கப்படுகின்றது என்பதை பிந்திய எறிவுகள் வெளிப்படுத்துகின்றன (வரைபடம் -17).

### வரைபு 16 | பொதுப் படுகடன்




மூலம் : இலங்கை மத்திய வங்கி சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டம்

### வரைபு 17 | மொத்த நிதியிடல் தேவை




மூலம் : சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டம்

பொதுப்படுகடனுடன் தொடர்புடைய 3 ஆவது நிகழ்ச்சித்திட்ட இலக்கு வெளிநாட்டு நாணய இடருக்கான படுகடன் சொத்துப்பட்டியலில் கடன்அளவுகளை முகாமைசெய்வதற்கு நாடுகின்றது. இக்குறிக்கோள், 2027-32 காலப்பகுதியில் ஏதேனும் ஆண்டில் வெளிநாட்டு நாணயப்படுகடன் தீர்ப்பனவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.5 சதவீதத்தை விஞ்சவில்லை என்பதை உறுதி செய்வதாகும். இவ்விலக்கு அவதானிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பதை மீண்டும் பிந்திய எறிவுகள் காண்பிக்கின்றன. (வரைபடம் 18)

### வரைபடம் 18 | வெளிநாட்டு நாணய படுகடன் தீர்ப்பனவு




மூலம் : சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டம்

### படுகடன் நிலைபெறுதன்மைக்கு ஆதரவளிப்பதற்கான மறுசீரமைப்புகள்

பொதுப்படுகடன் சொத்துப்பட்டியலுக்கான பாதிக்கப்படும் தன்மையினைக் குறைப்பதற்கும் இடர் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வையினை வலுப்படுத்துவதற்கும் இலங்கையில் பல வகையான நிறுவனசார் மற்றும் கொள்கை மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை உள்ளடக்குவன :

- பொருளாதாரத்தை நிலைநிறுத்தவும் வரவுசெலவுத்திட்ட நிலையை வலுப்படுத்தவும் பரந்த வகையான பேரண்டப் பொருளாதார மறுசீரமைப்புகள்
- பொதுப்படுகடன் நிலைபெறுதன்மை மட்டத்தினை எய்தும் நோக்கத்திற்காக படுகடன் குறைப்பு குறிக்கோளுக்கு ஒத்திசைவாக 2.3 சதவீதம் ஆரம்ப மீதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- படுகடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவை அண்மித்துள்ளன. இது படுகடன் நிலைபெறுதன்மை வாய்ப்பிற்கு கணிசமாகப் பங்களித்துள்ளது.
- 2024 டிசம்பரில் பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகம் தாபிக்கப்பட்டது. 2025 இல் இறுதியளவில் இது முழுமையாகத் தொழிற்படும்.
- பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம் மற்றும் பொது தனிசு முகாமைத்துவச் சட்டம் என்பன இயற்றப்பட்டுள்ளன. இவை இலங்கையில் அரசிறை ஆளுகையை நவீனமயப்படுத்தியுள்ளன.
- 2026-30 ஐ உள்ளடக்கி முதலாவது அரசிறை உபாயக் கூற்றை வெளியிடுதல் இது எண்ணியல் இலக்குகளுடன் திருத்தப்பட்ட அரசிறை பொறுப்புக்கட்டமைப்பை தாபிக்கின்றது.
- முதலாவது நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ உபாயம் 2025-29 ஐ வெளியிடுதல்
- நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ உபாயத்தை நடைமுறைப்படுத்தல் முன்னேற்றம் பற்றி அவ்வப்போதான அறிக்கையிடலுடன் வெளிப்படைத் தன்மையினையும் பொறுப்புக் கூறலையும் மேம்படுத்துவதற்கும் காலாண்டு படுகடன் செய்தித்திரட்டை வெளியிடுதல்.

நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ உபாயத்திற்கான வருடாந்த இற்றைப்படுத்தல்கள் ஒவ்வொரு வரவுசெலவுத்திட்டத்துடனும் சேர்ந்து வெளியிடப்படும் என்பதுடன் பல்வேறு படுகடன் சொத்துப்பட்டியல் இலக்குகள் மற்றும் அளவுருக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் முன்னேற்றம் பரிசீலனை கொள்ளப்படும். காலாண்டு செய்தித்திரட்டுக்கள் முக்கிய சொத்துப்பட்டியல் அளவுருக்கள் பற்றிய உயர் காலஇடைவெளி பகுப்பாய்வினை வழங்கி தகவல்கள் பகிரங்கமாகக் கிடைக்கச்செய்யப்படுவதை மேம்படுத்தும்.

அரசிறைக் கொள்கை அமைத்தலானது உரியகால கடன்பெறுதல் தேவைப்பாடு, படுகடன் மீள்கொடுப்பனவுகள் மிகவும் நிருவகிக்கத் தக்கதாகவிருத்தல் அத்துடன் வலுவான

கொடுகடன் தரப்படுத்தலை ஏற்படுத்தல் மற்றும் குறைவான கடன்பெறல் செலவு என்பவற்றையே குறித்துக்காட்டுகின்றது.

வெளிநாட்டு நாணயம் பெயர்குறிக்கப்பட்ட படுகடன்மீது தங்கியிருப்பதையும் செலாவணி வீத தளம்பலுடன் இணைந்த இடர்களைக் குறைப்பதற்கும் அத்துடன் சொத்துப்பட்டியலின் சராசரி முதிர்ச்சிக்காலத்தை நீடிப்பதற்கு முயற்சி எடுப்பதற்கும் அரசாங்க படுகடன் சொத்துப்பட்டியல் காலப்போக்கில் படிப்படியாக மீள் அளவமைக்கப்படும். இது வருடாந்த மீள் நிதியிடல் தேவைகளை காலப்போக்கில் குறைக்கும்.

**திறைசேரி உத்தரவாதங்கள்**

இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் படுகடன் பெறுமதி 2024 இறுதியில் சுமார் ஐ.அ.டொலர் 4,896 மில்லியனாக அல்லது மூன்று வருட சராசரி உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 5.36 சதவீதமாக இருந்தது. (வரைபு 19) அரசிறை உபாயத்தின் கீழ் அரசாங்கத்தின் படுகடன் குறைப்பு குறிக்கோள் நோக்கத்திற்காக மொத்த அரசாங்கத்துறை படுகடனினுள் இந்நிலுவை கணிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க உத்தரவாதங்களின் நிலுவையாக இருக்கின்ற மீதியினை தொடர்புடைய நிதியியல் ஆண்டுக்கும் முன்னுறுகின்ற இரு நிதியியல் ஆண்டுகளுக்கும் சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.5 சதவீதத்திற்குக் குறைவாக மட்டுப்படுத்துகின்ற பகிரங்க நிதி முகாமைத்துவச் சட்டத்தின்கீழ் தனியான வரையறையொன்றும் காணப்படுகின்றது. புதிய உத்தரவாதங்களுக்கான கோரிக்கை பற்றி பொருத்தமான நுண்ணாய்வினை உறுதி செய்வதற்கும் கோருகின்ற நிறுவனங்களின் (பொதுவாக நியதிச்சட்ட சபைகள் அல்லது அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்) நிதியியல் ஆரோக்கியம் மற்றும் கொடுகடன் நம்பகத்தன்மை பற்றிய மதிப்பீட்டுக்கும் புதிய கொள்கை மதிப்பீடொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஐ.அ.டொலர் 1,068 மில்லியன்) தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஐ.அ.டொலர் 747 மில்லியன்) மற்றும் ஸ்ரீலங்கன் எயர்லைன் (ஐ.அ.டொலர் 1,068 மில்லியன்) என்பவற்றுக்கான இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்படும் சில உத்தரவாதங்களைத் தாண்டி பாரிய நிலுவையாக இருக்கின்ற வர்த்தக உத்தரவாதங்கள் காணப்படுகின்றன. கூட்டாக இவ்வேற்பாடுகள் செலுத்த வேண்டிய உத்தரவாத சொத்துப்பட்டியலில் அண்ணளவாக 80 சதவீதத்திற்கு மேல் கொண்டுள்ளன.

**வரைபு 19 | நிலுவையிலுள்ள உத்தரவாதங்கள்**




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
பொதுப் படுகடன் முகாமைத்துவ திணைக்களம்

2024 இல் இலங்கை மின்சாரசபை மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சார்பில் முறையே இலங்கை வங்கிக்கும் மக்கள் வங்கிக்கும் ரூபா 8,104 மில்லியன் கொண்ட மதிப்பிடப்பட்ட பெறுமதியுடன் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.03% வீதத்திற்குக் குறைவாக) இரு புதிய உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன.

2024 இன் போது சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலை சார்பில் ரூபா 2,200 மில்லியன் மற்றும் ஸ்ரீலங்கன் எயர்லைன் சார்பில் ரூபா 2,400 மில்லியன் தொகையுடைய உத்தரவாத கடப்பாடுகளை திறைசேரி நிறைவேற்றியது.

**கடன்பெறுதலிலிருந்து கடன்வழங்கல்**

இலங்கை அரசாங்கமானது பல வகையான அரசாங்க நிறுவனங்கள் சார்பிலும் கடன் பெறுகின்றது. பொதுவாக அபிவிருத்திப் பங்காளர்களுக்கான விரும்பப்பட்ட நிறுவனசார் ஏற்பாடாக இது காணப்பட்டு உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் வேறு முன்னேற்றங்கள் அல்லது கொள்கை முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கின்றது.

2024 இறுதியில் கடன்பெறுதலிலிருந்து கடன்வழங்கல் ஏறத்தாள ரூபா 195 பில்லியனாக அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 0.7 சதவீதமாகவிருந்தது. பாரிய தனியொரு கடன் அளவாக சுமார் ரூபா 57 பில்லியன் கொண்ட கடனுடன் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கானதாக இருந்தது. கடன்வழங்கல் சொத்துப்பட்டியலின் சுமார் 94 சதவீதம் வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களுடனும் நிகழ்ச்சித்திட்டங்களுடனும் தொடர்புபட்டிருந்து, எஞ்சியது அரசாங்கதுறை நிறுவனங்கள் சார்பில் உள்நாட்டு மூலங்களிலிருந்து கடன்களை பிரதிபலிக்கின்ற 6 சதவீதமாக காணப்பட்டது.

| **தொகுப்பு மதிப்பீடு: சாத்தியம், நடுத்தர சாத்தியத் தாக்கம்** | **தரப்படுத்தல்** |
|---|---|
| இலங்கையின் படுகடன் தீர்ப்பனவுச் செலவு குறிப்பாக செலாவணி வீதங்கள் மற்றும் வட்டிவீதங்கள் மீது தாக்கம்செலுத்துகின்ற வரவிருக்கும் 5 ஆண்டுகளில் உருவாகக் கூடிய இடர்களின் நடுத்தர நிகழும் தன்மை காணப்படுகின்றது எனக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. ஐ.அ.டொலர்/ரூபா செலாவணி வீதம் தொடர்ந்தும் வலுவடைவதனால் இச்சந்தை அபிவருத்திகளில் சில சாதகமாக இருக்கக்கூடும். படுகடன் குறைப்பு, படுகடன் சொத்துப்பட்டியல் மறுசீரமைப்பு, அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி செயலாற்றுகையில் மற்றும் இலாபத்தன்மையில் மேம்பாடுகள் நிதியியல் வளம்பெறத்தக்க தன்மை பகுப்பாய்வு மூலம் துணையளிக்கப்பட்டு உத்தரவாதம் வழங்கல் மீதான கொள்கை வரையறைகள் என்பவற்றை உறுதிசெய்வதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கையின் பின்னணியில் சாத்தியமான தாக்கம் நடுத்தரமானதாக கருதப்படுகின்றது. |  |

**ஈ. இயற்கை அனர்த்தங்கள் மற்றும் காலநிலை மாற்றம் என்பவற்றிலிருந்து தோன்றுகின்ற நிதி இடர்கள்**

இயற்கை அனர்த்தங்களிலிருந்து தோன்றுகின்ற அரசிறை இடர்கள் பொதுவாக அனர்த்த ஒருங்கிணைப்பு, நிவாரணம் மற்றும் மீட்பு ஏற்பாடுகள் அத்துடன் பாதிக்கப்பட்ட பொதுச் சொத்துக்களை மீள் நிர்மாணித்தல் அல்லது புனரமைத்தல் என்பவற்றின் எதிர்பாராத செலவுகளை எதிர்கொள்வதிலிருந்து தோன்றுகின்றன.

அரசாங்க வருவாய் இழத்தல் மற்றும் காப்புறுதி காப்பீட்டை கொள்வனவு செய்தல் அல்லது வழங்குதல் தாக்குப்பிடிக்கத்தக்க உட்கட்டமைப்பை கட்டியெழுப்புதல் உள்ளடங்கலாக இடர் முகாமைத்துவம் மற்றும் தணித்தல் மீது வேண்டப்படும் மேலதிக செலவினம் என்பவற்றை ஏனைய முக்கிய நேரடியற்ற செலவுகள் உள்ளடக்குகின்றன.

பாரிய அனர்த்தம் ஒன்றின் பின்னர் பொருளாதார மூலதன தளத்திற்கான சேதம், ,உற்பத்தி இழப்பு மற்றும் வருமானத்தை விட்டுக் கொடுத்தல் என்பன ஊடாக பொருளாதார தாக்கங்கள் தோன்றலாம்.

ஏற்கனவே காணப்படுகின்ற ஏற்பாடுகள் மற்றும் அவசர கால செலவுகள் (வரவுசெலவுத்திட்டத்திற்குள்) அத்துடன் இடர் கைமாற்றல், எதிர்பாரா நிதியிடல் உபாயங்கள் (வரவுசெலவுத்திட்டத்தை தாண்டி) பாரிய நிகழ்வுகளுடன் ஈடுகொடுப்பதற்கு போதாமல் இருக்கின்றபோது இயற்கை அனர்த்தங்கள் அரசிறை இடர்களாக மாற்றமடைவதற்கு முனைகின்றன.

பாரிய நிகழ்வொன்றின் பின்னர் எதிர்பாராப்பொறுப்புக்களும் தூண்டப்படலாம் (உதாரணம் : அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியொன்று தற்காலிகமாக படுகடன் தீர்ப்பனவு செய்யமுடியாவிடின் அல்லது அரசாங்க தனியார் பங்குடமையின் கீழ் வருமான உத்தரவாதம் செயற்படுத்தப்படுமாயின்) (உதாரணம்: கடுமையாக சேதமடைந்த கட்டணம் அறவிடும் வீதிக்காக)

காலநிலை மாற்றமானது இயற்கை அனர்த்தங்கள் நிகழும் இடைவெளிகளையும் தாக்கத்தையும் அதிகரித்து வலுவான இயற்கை அனர்த்த இடர்முகாமைத்துவ மற்றும் தணிப்பு நடைமுறைகளை தாபிப்பதற்கான அவசர நிலையினை தோற்றுவிக்கின்றன. மிகவும் மோசமான காலநிலை மாற்றச் சூழ்நிலைகள் இலங்கையின் தொழிலாளர் உற்பத்தித்திறன் மீது ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தி, சாத்தியமான பொருளாதார வளர்ச்சியை குறைவடையச் செய்து, அரசிறை நிலைபெறுதன்மைக்கான நீண்டகால உள்ளார்ந்தங்கள் மீது மிகவும் கவனம் செலுத்துவதற்கு தேவைப்படுத்தலாம்.

**இலங்கை இயற்கை அனர்தங்களுக்கு உள்ளாகும் தன்மை.**

இலங்கை அநேகமாக குறிப்பிடத்தக்களவு கிரமமாக நிகழுகின்ற நிகழ்வுகளுக்கு மத்தியில் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவுகள், சூறாவளி, வறட்சி என்பனவற்றுடனான பல வகையான இயற்கை அனர்த்த அபாயங்களுக்கு உட்படுகின்றது. (வரைபு 18)

தனிப்பட்ட நிகழ்வுகளின் அளவும் முக்கியத்துவமும் அரிதான நிகழ்வுகளின் தீவிரதன்மை காரணமாக மாத்திரமன்றி மிகவும் அடர்த்தியாக குடித்தொகை மிக்க பிரதேசங்களை அவை பாதிக்கின்ற அல்லது செயற்பாட்டிலுள்ள உட்கட்டமைப்பு தாக்குப்பிடிக்கும்தன்மைக்கு அமைவான அளவிலும் அவை வேறுபடுகின்றன.

குறைவாக நிகழும் மிகவும் செலவுமிக்க இயற்கை அனர்த்தங்களுக்கு மத்தியில் 2004 இந்துசமுத்திர சுனாமி நாட்டின் அனேகமான பாகங்களில் உணரப்பட்ட பேரழிவுத் தாக்கங்களுடனும் அதனோடிணைந்த உயிர் மற்றும் வாழ்வாதார இழப்புகளுடனும் தனியொரு பாரிய இழப்பு நிகழ்வாக அமைந்திருந்தது (2023 நியதிகளில் ஐ.அ.டொலர் 2 பில்லியனுக்கு மேல்).

அண்மைய ஆண்டுகளில் பாரிய வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகள் குறிப்பிடத்தக்க சவால்களை தோற்றுவித்துள்ளன (2016 மற்றும் 2017 களில் வெள்ளப்பெருக்கிலிருந்தான ஒன்றிணைந்த பொருளாதார இழப்பு 2023 நியதிகளில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.3 பில்லியனாகும்.

வறட்சியானது விவசாய உற்பத்திகள் மற்றும் வருமானங்கள் மீது கடுமையான மற்றும் நிலையான தாக்கங்களைக் கொண்டிருந்தன. குறிப்பிடத்தக்க டெங்கு காய்ச்சல் பரவலும் மிதமாக அவ்வப்போது இடம்பெற்றுள்ளது.

**வரைபு 20 | இயற்கை பேரழிவுகள் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் (பாதிக்கப்பட்ட நபர்கள், ஆபத்து, பதிவு அளவுகோல்)**




மூலம் இலங்கை தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் செயல்படுத்தல் திட்டம் 2021-2030

**இயற்கை பேரழிவுகள் மற்றும் காலநிலை மாற்றங்கள் மூலம் ஏற்பட்ட செலவினங்கள்**

இலங்கையில் ஏற்பட்ட இயற்கை பேரழிவுகளின் வரலாற்று செலவுகள் குறித்து தற்போது குவிமையப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ மதிப்பீடுகள் எதுவும் இல்லை. இருப்பினும், ஏற்பட்ட பாரிய சம்பவங்களைத் தொடர்ந்து கடந்த தசாப்தத்தில் அபிவிருத்திசார் பங்குதாரர்களினால் பல மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டில், உலக வங்கி மற்றும் அனர்த்த குறைப்பு மற்றும் மீட்புக்கான உலகளாவிய வசதியளிப்பு நிறுவனம்[2] GFDRR) இலங்கையில்[2] இயற்கை பேரழிவுகளுடன் தொடர்புடைய செலவுகளின் மதிப்பீடுகளைத் தயாரித்தது.

இது இயற்கை பேரழிவுகளிலிருந்து வருடாந்த சராசரி பொருளாதார இழப்பு[3] மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.5 சதவீதமாக இருப்பதைக் கண்டறிந்துள்ளது, இது 2004 இல் இந்து சமுத்திரத்தில் ஏற்ப்பட்ட சுனாமிப் பேரழிவின் தாக்கத்தை ஒதுக்கி வைத்துள்ளது, இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.0 சதவீதத்திற்கும் அதிகமான இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

பேரழிவுகளுடன் தொடர்புடைய அரசிறை செலவுகள் குறித்து இந்த ஆய்வு பலவிதமான அனுமானங்களைப் பயன்படுத்தியுள்ளது, வீட்டுவசதி மற்றும் பாதைகளுக்கான ஒருங்கிணைப்பு, நிவாரணம் மற்றும் மீட்பு செலவுகளுடன் தொடர்புடைய நிதி செலவுகளை மையமாகக் கொண்டுள்ளது, இவை ஆண்டுக்கான சராசரி பொருளாதார இழப்பில் மூன்றில் ஒரு பங்கு அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5 சதவீதம் சராசரியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இயற்கை பேரழிவுகளின் நிகழ்தன்மை மற்றும் தீவிரம் அதிகரிக்கக்கூடும் என்ற கரிசனையும் காணப்படுகின்றது. இலங்கையில் இயற்கை பேரழிவுகளிலிருந்து சராசரி பொருளாதார இழப்பின் சமீபத்திய மதிப்பீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில்[4] 2.5 சதவீதம் ஆகும்.

மேலே கலந்துரையாடப்பட்ட உலக வங்கி / புகுனுசுசு அனுமானங்கள் பயன்படுத்தப்பட்டால், இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.9 சதவீத வரிசையில் எதிர்பார்க்கப்படும் வருடாந்த அரசிறை செலவுகளாக பரிவர்த்தனை செய்யப்படும்.

மாற்று காலநிலை மாற்ற சூழ்நிலைகளின் கீழ், இலங்கையின் இயற்கை பேரழிவுகளிலிருந்து ஏற்படும் வருடாந்த பொருளாதார இழப்புகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5 முதல் 2.8-3.0 சதவீதம் வரை அதிகரிக்கின்றன. அல்லது மேலே உள்ள அனுமானங்களைப் பயன்படுத்தும் சுமார் 1.1 சதவீத அரசிறை செலவு நேருகின்றது.

இலங்கை வருடாந்த காலநிலை மாற்ற தழுவல் செலவுகளை ஆண்டுக்கு 430 மில்லியன் அமெரிக்க டொலர் அல்லது ஆண்டுக்கு[5] சதவீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தி மூலம் எதிர்கொள்கிறது[4].

3 உலக வங்கி மற்றும் GFDRR (2016), அரசிறை இடர்பாடு சார் மதிப்பீடு மற்றும் இடர்வரைவு நிதிவழங்கற் தேர்வுகள்.

4 இயற்கை பேரழிவுகளின் பின்னணியில் ஏற்படும் பொருளாதார இழப்பானது மூலதன பங்குக்கு சேதத்தின் மதிப்பையும், காயம் மற்றும் உயிர் இழப்பு உட்பட இழந்த உற்பத்தி மற்றும் வருமானத்தின் மதிப்பையும் பரவலாகக் பாதிக்கின்றது. இந்த சூழலில் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் தாக்கத்திற்கு ஒத்ததாக இருக்காது.

**இயற்கை பேரழிவுகளினால் ஏற்படும் நிதிசார் அபாயங்களை நிர்வகித்தல்**

அரசிறை இடர்பாடுகளுக்கான காரணமாக அமைகின்ற இயற்கை பேரழிவுகளின் சாத்தியமான முக்கியத்துவத்தைப் பொறுத்தவரை, அரசாங்கம் பின்வரும் சீர்திருத்தங்களையும் மதிப்புரைகளையும் அபிவிருத்தி கூட்டாண்மையாளர்களின் ஆதரவுடன் தொடரவுள்ளது. எதிர்காலத்தில் இயற்கை பேரழிவுகள் மற்றும் காலநிலை மாற்றங்களிலிருந்து அரசிறை இடர்பாடுகளை மதிப்பிடுவதற்கும் நிர்வகிப்பதற்கும் இது ஒரு வலுவான அடித்தளத்தை வழங்க முடியும் என்றும் நம்பப்படுகிறது.

- தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்துடன் ஒத்துப்போதல், இயற்கை பேரழிவுகளுக்கான உண்மையான செலவினங்களைக் கண்காணித்தல், இடர் மதிப்பீடு மற்றும் முன்னறிவிப்பு கருவிகளை மேம்படுத்துதல், தரவுத்தளங்கள் மற்றும் நிதி பதிவுகளை மேம்படுத்துதல்

- வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள், தற்செயல்கள் மற்றும் இருப்புக்களின் போதுமான தன்மையை மதிப்பாய்வு செய்து, அதிக தீவிரத்தன்மை கொண்ட இயற்கை பேரழிவுகள் நிகழும் போது எவ்வாறு அரசிறை மூலோபாயத்தின் செலவு உச்சவரம்புக்குள் நிர்வகிக்கப்படும் என்பதற்கான விரிவான திட்டங்களை உருவாக்குதல்;

- காப்பீட்டு மற்றும் மீள்காப்பீட்டு சந்தைகள் மற்றும் தொடர்ச்சியான அரசிறை கருவிகளின் ஆழம், நம்பகத்தன்மை மற்றும் சிக்கனம் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்தல்;

- இயற்கை பேரழிவுகளுக்கு நிதித்துறை மற்றும் அரசாங்கத்தின் மொத்த செயற்திறனைக் கண்காணித்தல்;

- மாற்று காலநிலை மாற்ற சூழ்நிலைகளின் போது எதிர்பார்க்கப்படும் பொருளாதார மற்றும் நிதிசார் தாக்கங்களை மாதிரியாகக் கொண்டு செயற்படல்.

இந்த முயற்சிகளின் ஊடான முன்னேற்றம் அடுத்தடுத்த அரசிறை இடர்பாட்டு அறிக்கைகளில் தெரிவிக்கப்படும்.

5 UN ESCAP, இடர் மற்றும் மீட்புச் செயற்காட்டி, இலங்கையை அடிப்படையாகக் கொண்டது

6 UN ESCAP, இடர் மற்றும் மீட்புச் செயற்காட்டி, இலங்கையை அடிப்படையாகக் கொண்டது

| சுருக்க மதிப்பீட்டு: சாத்தியமான, நடுத்தர அளவிலான, வாய்ப்புள்ள தாக்கம். | புள்ளியிடல் |
|---|---|
| நடுத்தர கால திட்டமிடல் செயற்பாட்டுக்குள் வெள்ளம், மண்சரிவுகள் மற்றும் வறட்சி போன்ற இயற்கை பேரழிவுகளிலிருந்து பொருளாதார ரீதியான பாதிப்புகளை அனுபவிப்பதற்கான அதிக வாய்ப்பு இலங்கையில் உள்ளது. சம்பவங்களின் தீவிரத்தன்மையைக் கணிப்பது கடினம் என்றாலும், எதிர்பாராத நிதி செலவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.25 முதல் 0.75 சதவீதம் என்ற வரம்பிற்குள் நிற்கக்கூடும் என்பதை வரலாற்று அனுபவம் எடுத்துக்காட்டுகின்றது, அதிக பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தும் சம்பவங்களும் நிகழக்கூடும். இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளானவை கடன் குறைவடையும் பாதையில் இருப்பதை உறுதி செய்தல் மற்றும் வருடாந்த ஒதுக்கீடுகள், தற்செயல் சம்பவங்களின் காப்பீடு மற்றும் காப்பீடு மற்றும் மீள்காப்பீட்டு பாதுகாப்பு ஆகியவற்றின் போதுமான தன்மையை மதிப்பாய்வு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும். |  |

**உ. அரச மற்றும் தனியார் கூட்டாண்மைகள் மூலம் ஏற்படும் நிதி இடர்பாடுகள்**

அரசாங்க கூட்டாண்மைகள் மற்றும் தனியார் கூட்டாண்மைகள் மூலம் அரசிறை இடர்பாடுகள் ஏற்படக்கூடும். அவை அடிப்படை சட்ட ஒப்பந்தங்கள் அரசாங்க அல்லது அரசாங்க நிறுவனங்களுக்கான இறைவரி உத்தரவாதங்கள் அல்லது கடன் உத்தரவாதங்கள் போன்றவை மூலம் அரசாங்கத்துக்கு அல்லது அரசாங்க நிறுவனங்களுக்கு இடைநேர் விளைவு பொறுப்புடைமைகளை ஏற்படுத்தும் சட்டபூர்வ ஒப்பந்தகளை நிறைவேற்றும் சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்றன. அல்லது வணிக ரீதியான தகராறு அல்லது கொள்கை மாற்றம் தொடர்பான இழப்பீட்டுக்கான சாத்தியமான சட்ட உரிமைகோரல்கள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்றன.

**இலங்கையில் சமீபத்திய அரசாங்க மற்றும் தனியார் கூட்டாண்மை நடவடிக்கைகளின் கண்ணோட்டம்**

சமீபத்திய ஆண்டுகளில், இலங்கை பல அரசாங்க கூட்டாண்மைகள் மற்றும் தனியார் கூட்டாண்மைகளைத் தொடங்கியுள்ளது, குறிப்பாக போக்குவரத்து, எரிசக்தி மற்றும் நகர்ப்புற மேம்பாடு போன்ற துறைகளில், மேம்பட்ட உள்கட்டமைப்பு மற்றும் சேவை வழங்கலுக்கு அதிக தனியார் முதலீட்டை இலங்கை அணிதிரட்டுகிறது. அரசாங்க கூட்டாண்மைகள் மற்றும் தனியார் கூட்டாண்மைகள் அறிமுகப்படுத்தப்பட்ட சில முக்கிய துறைகள்:

**மின் சக்தி மற்றும் எரிசக்தி:** இலங்கை மின்சார சபை, நிலையான எரிசக்தி அதிகார சபை மற்றும் அணுசக்தி சபை தலைமையிலான பல அரசாங்க மற்றும் தனியார் கூட்டாண்மை எரிசக்தி திட்டங்களை இலங்கை செயல்படுத்துகிறது. முக்கிய முன்னேற்றங்களில் கெரவலபிட்டியாவில் இரண்டு 350 மெகா வோல்ற்று எல்.என்.ஜி ஆலைகள் அடங்கும், இவை இரண்டும் வரி மற்றும் உள்கட்டமைப்பு மாற்றங்கள் காரணமாக மறுபிரவேசம் செய்யப்பட்டன, 37.83 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் 35.56 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு அதிகரிப்பு இதனால் ஏற்பட்டுள்ளது. திருகோணமலையில் 50 மெகா வோல்ற்று அனல் மின் திட்டம் ஒரு இறையாண்மை உத்தரவாதத்தை உள்ளடக்கியது, மேலும் 50 சதவீதமான மின்சார சபையின் பங்கு பங்களிப்பில் (அமெரிக்க டொலர் 12.5 மில்லியன்) இன்னும் நிலுவையில் உள்ளது.

மற்ற முக்கிய திட்டங்களில் பூநகரியில் 700 மெகா வோல்ற்று அனல் மின் ஆலை, தம்பபவானியில் 50 மெகா வோல்ற்று காற்றாலைத் திட்டம் மற்றும் சியாம்பாலண்டுவ மற்றும் அம்பந்தோட்டையில் அனல் மின் ஆலைகள் ஆகியவை அடங்கும். பெரும்பாலான திட்டங்கள் தனியார் முதலீட்டாளர்களால் நிதியளிக்கப்படுகின்றன, மேலும் அவை அரசாங்க உத்தரவாதங்களைச் சார்ந்திருக்கவில்லை.

**நீர் மற்றும் சுகாதாரம்:** அரசாங்க-தனியார் கூட்டாண்மை கட்டமைப்பின் கீழ், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2025 ஆம் ஆண்டு தொடங்கி காலியில் ஒரு பெரிய அளவிலான வருவாய் அல்லாத நீர் குறைப்பு திட்டத்தைத் தொடங்குகிறது. ஆதன் கால அளவாக எட்டு ஆண்டுகள் திட்டமிடப்பட்ட காலப்பகுதி அமைந்துள்ளது. தற்போது அதன் ஆரம்ப கட்டங்களில், திட்டத்தில் ரூ. 3,337 மில்லியன் மற்றும் தனியார் துறை ஒத்துழைப்பு மூலம் நீர் இழப்புகளைக் குறைப்பதன் மூலம் நீர் வழங்கல் சேவை செயற்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**துறைமுக அபிவிருத்தி:** 700 மில்லியன் அமெரிக்க டொலர் கொண்ட மேற்கு கொள்கலன் இறங்குதுறை (WCT-I) திட்டமானது பெப்ரவரி 2022 முதல் செயல்பட்டு வருகிறது, இது பெப்ரவரி 2027 வரை தொடரும். 200 மில்லியன் அமெரிக்க டொலராக மதிப்பிடப்பட்ட காலித் துறைமுக அபிவிருத்தித் திட்டம் தற்போது கொள்முதல் கட்டத்தில் உள்ளது, மே 2024 இல் பெறப்பட்ட ஏழு ஆர்வ வெளிப்பாட்டு விண்ணப்பத்தின் பேரில் ஆறு பேர் பட்டியலிடப்பட்டுள்ளனர், மற்றும் அதன் காலக்கெடு ஜூன் 12, 2025 க்கு

அமைக்கப்பட்டுள்ளது. தெற்காசியா வணிக மற்றும் பொருட்சேவை மையம், 150 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை கொண்ட திட்டத்தினை வழங்கி 42 மாதங்களுக்கும் மேலாக அதனை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முயற்சிகள் இலங்கையின் துறைமுக உள்கட்டமைப்பை தனியார் துறையுடன் மூலோபாய கூட்டாண்மை மூலம் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**அரச மற்றும் தனியார் கூட்டாண்மைகள் மூலமாக ஏற்படும் அரசிறை இடர்பாடுகள் பற்றிய பகுப்பாய்வு**

அரச மற்றும் தனியார் கூட்டாண்மைத் திட்டங்களின் அதிகாரப்பூர்வ பதிவு அல்லது செயல்திறன் மற்றும் அபாயங்களைக் கண்காணிக்கும் எந்தவொரு மைய ஒருங்கிணைப்பு அமைப்பும் தற்போது இலங்கையில் இல்லை. இது 2026 வரவுசெலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்பட வேண்டிய திட்டங்களின் முழுமையான பட்டியலுடன் தீர்த்துவைக்கப்பட வேண்டிய ஒரு பலவீனமான அம்சமாகும்.

அரச மற்றும் தனியார் கூட்டாண்மைகளுடன் தொடர்புடைய அரசிறை இடர்பாடுகளை அரசாங்கம் அங்கீகரிக்கிறது, குறிப்பாக கடந்த கால அனுபவங்களின் மூலம், மோசமாக கட்டமைக்கப்பட்ட அரச மற்றும் தனியார் கூட்டாண்மைகள் மற்றும் கோரப்படாத திட்டங்கள் தொடர்ச்சியான கடன்களை ஏற்படுத்தியுள்ளதுடன் நீண்டகால அரசிறை வெளிப்பாடுகளை உருவாக்கின.

பிராந்திய தோழமை நாடுகளுடன் ஒப்பிடும்போது நாடு அரச மற்றும் தனியார் கூட்டாண்மைகளைப் பரவலாகப் பயன்படுத்தும்போது, வலுவான சட்ட மற்றும் நிறுவன கட்டமைப்பு ஒன்று இல்லாதது முன்னர் நிலையான இடர் மதிப்பீட்டிற்கான தடையாக இருந்தது.

பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் மற்றும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் மேம்பாட்டு கூட்டாளர்களின் ஆதரவுடன், அரச மற்றும் தனியார் கூட்டாண்மைகளுக்கான கடுமையான அரசிறை இடர் மதிப்பீடுகளை அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஒரு வரைவு அரச மற்றும் தனியார் கூட்டாண்மை சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது, மேலும் நிதி அமைச்சிற்குள் ஒரு குவிமையப்படுத்தப்பட்ட அரச மற்றும் தனியார் கூட்டாண்மைப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் கூட்டாண்மை தொடர்பான அபாயங்களான உத்தரவாதங்கள், குறைந்தபட்ச வருவாய் கடமைகள் மற்றும் பிற வகையான தொடர்ச்சியான பொறுப்புகள் மிகவும் முறையாக வரைபடமாக்கப்படுகின்றன, இருப்பினும் இந்த பகுப்பாய்வின் ஆழம் மற்றும் நிகழ்தன்மை போன்ற விடயங்களில் இன்னும் முன்னேற்றம் தேவையாக உள்ளது.

**இடர் குறைப்பு உத்திகள்**

அரச மற்றும் தனியார் கூட்டாண்மைகளிடமிருந்து அரசிறை இடர்பாடுகளைத் தணிக்க, நிறுவன ரீதியான மற்றும் கொள்கை ரீதியான பல சீர்திருத்தங்கள் நடந்து வருகின்றன.

செயற்றிட்டத்துக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் விடயத்தின் ஓர் அங்கமாக பணத்தின் மதிப்பு பற்றிய பகுப்பாய்வு, இடர் ஒதுக்கீடு அளவீடுகள் பற்றிய கட்டாய அரசிறை தாக்க மதிப்பீடுகளுக்கான தரப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட வேண்டியமை இதனுள் அடங்கும்.

இதனைத் தணிக்கும் ஒரு முக்கிய கருவியக குவிமையப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான ஒரு பொறுப்பு பதிவேட்டை நிறுவுவதாகும். அதில் எத்தகைய அரச மற்றும் தனியார் கூட்டாண்மை தொடர்பான கடமைகளும் அடங்கும். பொது நிதி முகாமைத்துவச் சட்டம் கட்டாயக் கடன்களை வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்துகிறது, மேலும் இது தெரிவுநிலையையும் மேற்பார்வையையும் விருத்திசெய்யும். மேலும், புதிய அரச மற்றும் தனியார் கூட்டாண்மை ஒப்பந்தங்களில் இடர்-பகிர்வு ஏற்பாடுகள் அரசாங்க வெளிப்பாடு குறித்த தெளிவான திட்டத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன, இதில் உத்தரவாதங்கள் மற்றும் நம்பகத்தன்மை இடைவெளி நிதி ஆகியவை அடங்கும். அரச மற்றும் தனியார் கூட்டாண்மை கட்டமைப்பு மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் திறனை வலுப்படுத்த பலதரப்பு கூட்டாளர்களிடமிருந்து தொழில்நுட்ப உதவியும் அணிதிரட்டப்படுகிறது.

ஒட்டுமொத்தமாக, இந்த நடவடிக்கைகள் அரசிறை வரும்படியின் நிலைத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தாமல் பொது மதிப்பை வழங்க அரச மற்றும் தனியார் கூட்டாண்மைகளை சரியான முறையில் பயன்படுத்த முடியும் என்பதை மேலும் உறுதிசெய்கின்றன.

இது வெளிப்படைத்தன்மை, போட்டி, நிதிப் பொறுப்பு மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக தரங்களை பின்பற்றுவதை வலியுறுத்துகிறது, அதே நேரத்தில் பொதுத்துறையில் அறிவு பரிமாற்றம் மற்றும் திறன் மேம்பாட்டை ஊக்குவிக்கிறது. இந்த சட்டமூலம் சட்டரீதியான உறுதியையும் நிறுவன தெளிவையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இதன் மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்துகிறது மற்றும் அரசாங்க தனியார் கூட்டாண்மை நிர்வாகத்தை சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் இணைக்கிறது.

<table>
<tr>
<td>சுருக்க மதிப்பீட்டு:<br>சாத்தியமான, வாய்ப்புக்<br>குறைவாக உள்ள தாக்கம்.<br><br>இலங்கை அரசாங்க மற்றும் தனியார் கூட்டாண்மைகளைப் பயன்படுத்துவது தேசிய உட்கட்டமைப்பு திட்டங்களில் ஒப்பீட்டளவில் சிறிய விகிதத்தில் உள்ளது, ஆனால் கடந்த தசாப்தத்திற்குள் பொருள்சார் அரசிறை அபாயங்கள் இந்த மூலத்திலிருந்தே தோற்றம் பெறுகின்றன. தற்போதைய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு கட்டமைப்பில் இடைவெளிகள் உள்ளன. அவை தீர்க்கப்பட வேண்டும். ஒரு இடைக்கால மதிப்பீடாக, தற்போதுள்ள அரசாங்க மற்றும் தனியார் கூட்டாண்மை ஒப்பந்தங்களின் கீழ் உணரப்படும் தொடர்ச்சியான கடன்களின் சாத்தியமான தாக்கம் ஒப்பீட்டளவில் குறைவாக கருதப்படுகிறது. இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஒரு தேசிய சட்ட கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் தற்போதுள்ள அனைத்து மற்றும் புதிய திட்டங்களின் பொருத்தமான இடர் பகுப்பாய்வு மற்றும் மேற்பார்வை உறுதிப்படுத்துவதற்கான கட்டமைப்பை ஒருங்கிணைப்பது போன்றவற்றை இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் உள்ளடக்குகின்றன.</td>
<td>புள்ளியிடல்<br><br>
<table>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td>■</td><td></td></tr>
</table>
</td>
</tr>
</table>

**நிதி செயல் நுணுக்கக் கூற்றின் தேவையான உள்ளடக்கங்கள்**

பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தில் நிதி செயல்நுணுக்கக் கூற்றின் குறைந்தபட்ச உள்ளடக்கத்தைப் பற்றி குறிப்பிடுகின்றது, இதில் பின்வருவன அடங்கும்:

(I) அரசாங்கத்தினுடைய நிதி இலக்குகளை மற்றும் அத்தகைய இலக்குகளை எய்துதலை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற கொள்கைகளை குறித்துரைத்தல்;

(II) பொதுத் தனிசை நிலைபெறுதகு மட்டத்துக்கு குறைப்பதற்காக உத்தேசிக்கப்பட்ட கால வரையறையை உள்ளடக்குதல்;

(III) பொறுப்பான அரசிறை முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் மூலோபாய முன்னுரிமைகள்;

(IV) அரசாங்கத்தினுடைய நிதி இலக்குகள் மற்றும் கொள்கைகள் என்பன பொறுப்பான நிதி முகாமைத்துவத்தின் குறிக்கோள்களுடன் எவ்வாறு இசைந்தொழுகுகின்றது என்பதனை விளக்குதல்;

(V) நடுத்தரகால நிதிக் கட்டமைப்பு;

(VI) நிதி செயல்நுணுக்கத்துக்கு எதிரான நிறைவேற்றத்தின் மதிப்பீட்டினை வழங்குதல்-

- அத்தகைய இலக்குகளுடன் எவையேனும் இணக்கமின்மை தொடர்பான விளக்கம் உள்ளடங்கலாக, முற்போந்த நிதி ஆண்டிற்கான நிதி இலக்குகளுடன் இசைந்தொழுகுதல் பற்றிய மதிப்பீடு;
- தற்போதைய நிதி ஆண்டிற்கான நிதி இலக்குகளுடன் எதிர்பார்க்கப்பட்ட இணங்கியொழுகுதல் பற்றிய மதிப்பீடொன்று;
- அடுத்த நிதியாண்டு மற்றும் அடுத்துவரும் நான்கு ஆண்டுகள் என்பவற்றுக்கான நிதி இலக்குகளுடன் எதிர்பார்க்கப்பட்ட இணங்கியொழுகுதல் பற்றிய மதிப்பீடொன்று; அத்துடன்
- தற்போதைய நிதியாண்டு மற்றும் அடுத்த நிதியாண்டு என்பவற்றுக்கான நிதி இலக்குகளுடன் இசைந்தொழுகாமை பற்றிய இடர்கள் பற்றிய மதிப்பீடொன்று;

(VII) குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு எதிராக நிதி இடர்கள் பற்றிய பிரதான மூலங்களை குறித்துரைத்தலும் அத்தகைய நிதி இடர்கள் பற்றிய நிதி தாக்கத்தை மதிப்பீடு செய்தலும்; அத்துடன்

(VIII) கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேல் எடுக்கப்பட்ட நிதி முடிவுகளின் பேரினப் பொருளாதார தாக்கத்தினை வெளிப்படுத்துதல்.

**மேம்பட்ட அரசிறை நிலைத்தன்மைக்கு ஆதரவளிப்பதற்கான குறிப்பிட்ட கொள்கை நடவடிக்கைகள்**

1. அரசிறை ஒழுங்கமைப்பிற்கான புதிய சட்டக் கட்டமைப்பு
   - 2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் இயற்றப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பொதுத் தனிசு (கடன்) முகாமைத்துவச் சட்டம்.
   - 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இயற்றப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம்.
   - 2024 டிசம்பர் 02, ஆம் திகதி பொதுத் தனிசு (கடன்) முகாமைத்துவ அலுவலகம் நிறுவப்பட்டது
   - வரிச் செலவினங்கள் பற்றிய கூற்று வெளியீடு.

2. பிரதான வரிக் கொள்கை சீர்திருத்தங்கள்: அடிப்படையை விரிவுபடுத்துதல், விகிதங்களை குறியீட்டுமுறைக்குட்படுத்துதல்

   2024 ஜனவரி 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில்;

   - நிலையான பெறுமதி சேர் வரி வீதத்தினை (VAT) 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்துதல்.
   - பெரும்பாலான முக்கிய பொருட்கள் மீதான பெறுமதி சேர் வரி விலக்குகளை நீக்குதல்.
   - ஆண்டுக்கு ரூ.80 மில்லியனாக இருந்த பெறுமதி சேர் வரிக்கான பதிவு வரம்பை ரூ. 60 மில்லியனாகக் குறைத்தல்.
   - ஆண்டுக்கு ரூ. 120 மில்லியனாக இருந்த சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டிற்கான பதிவு வரம்பை ரூ. 60 மில்லியனாக குறைத்தல்.
   - வருடாந்த பணவீக்கத்துடன் திருத்தியமைக்கப்பட்ட குறியீட்டுமுறையின் அடிப்படையில், உற்பத்தித் தீர்வை அலகு விகிதங்களைக் கொண்ட அனைத்து பொருட்களின் மீதான உற்பத்தித் தீர்வையினை 14 சதவீதத்தால் திருத்தியமைத்தல்.
   - வருடாந்த பணவீக்கத்துடன் திருத்தியமைக்கப்பட்ட குறியீட்டுமுறையின் அடிப்படையில், அனைத்து வகையான மதுபானங்களுக்கும் மது வரியை 14 சதவீதத்தால் அதிகரித்தல்.

2025 ஜனவரி 11 முதல் நடைமுறைக்கு வரும் வகையில்;

- வருடாந்த பணவீக்கத்துடன் திருத்தியமைக்கப்பட்ட குறியீட்டுமுறையின் அடிப்படையில், உற்பத்தித் தீர்வை அலகு விகிதங்களைக் கொண்ட அனைத்து பொருட்களின் மீதான உற்பத்தித் தீர்வையினை 5.9 சதவீதத்தால் திருத்தியமைத்தல்.
- வருடாந்த பணவீக்கத்துடன் திருத்தியமைக்கப்பட்ட குறியீட்டுமுறையின் அடிப்படையில், அனைத்து வகையான மதுபானங்களுக்கும் மது வரியை 5.9 சதவீதத்தால் அதிகரித்தல்.

2025 ஏப்ரல் 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில்;

- ஒரு தனிநபரின் தனிநபர் வருமான வரி நிவாரணத்தை ஆண்டுக்கு ரூ. 1,200,000/- இலிருந்து ரூ. 1,800,000/- ஆக உயர்த்துவதுடன் ஒரு தனிநபரின் வரி விதிக்கக்கூடிய வருமானத்திற்கு பொருந்துமாறு வரி விகிதங்களை திருத்தியமைத்தல்.

தனிநபர் வருமான வரி கட்டமைப்பில் திருத்தங்கள்

| | வருடாந்த வரி விதிக்கக்கூடிய வருமானம் (ரூபா.) | |
|---|---|---|
| வரி வீத விளிம்பு (%) | முன்னைய ஆட்சி | தற்போதைய ஆட்சி |
| 0 | 1.2 மில்லியன் வரை | 1.8 மில்லியன் வரை |
| 6 | 1.2 – 1.7 மில்லியன் | 1.8 – 2.8 மில்லியன் |
| 12 | 1.7 – 2.2 மில்லியன் | - |
| 18 | 2.2 – 2.7 மில்லியன் | 2.8 – 3.3 மில்லியன் |
| 24 | 2.7 – 3.2 மில்லியன் | 3.3 – 3.8 மில்லியன் |
| 30 | 3.2 – 3.7 மில்லியன் | 3.8 – 4.3 மில்லியன் |
| 36 | 3.7 மில்லியனுக்கு மேல் | 4.3 மில்லியனுக்கு மேல் |

3. வரி நிர்வாகம் மற்றும் நிறுவன மறுசீரமைப்பு

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

- குற்றப்புலனாய்வுப் பிரிவை நிறுவுதல்.
- தொழில் மற்றும் வட்டி வருமானம் மட்டுமே உள்ள நபர்களிற்கான 2023/2024 மதிப்பீட்டு ஆண்டிற்கான எளிமைப்படுத்தப்பட்ட தனிநபர் வருமான வரி வருமான படிவத்தை அறிமுகப்படுத்தியது.
- இடர் முகாமைத்துவ அலகை விரிவுபடுத்தியது.
- அக்டோபர் 2025 இல் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமை ஒழிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏற்றுமதியாளர்களுக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி திரும்பப்பெறுதலை விரைவுபடுத்துவதற்காக ஒரு ஏற்றுமதியாளர் பண மீளப்பெறல் அலகு தொடங்கப்பட்டது
- உள்ளக விவகாரப் பிரிவை நிறுவுதல்.

இலங்கை சுங்கம்

- 2024-2028 ஆம் ஆண்டிற்கான ஒரு மூலோபாயத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது
- உள்ளக விவகாரப் பிரிவு நிறுவப்பட்டது.
- வாராந்த பிரதான செயற்றிறன் குறியீட்டு (KPI) மதிப்பெண் அட்டைகளுடன் "80 - நாள் சிறப்பு" வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது..
- புதுப்பிக்கப்பட்ட இடர் விதிகள் மற்றும் கொள்கலன்-தேர்வு வெற்றி விகிதம்.
- ASYHUB தொகுதியை அமுல்படுத்தல்.

மது வரித் திணைக்களம்

- வருமானத்துறையை செயற்படுத்தத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளைத் தொடங்கியமை மது வரித் திணைக்களத்திற்கான நிர்வாகத் தொகுதி.
- நாடு முழுவதும் உரிமம் பெற்ற மதுவரி வளாகங்களின் விருத்தி செய்யப்பட மேற்பார்வை.
- 100 நாள் விஷேட செயற்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்தியது (20.05.2024 முதல் 27.08.2024 வரை).
- 24 மணி அவசர தொலைபேசி இலக்கம் 1913 ஐ அறிமுகப்படுத்தியமை.
- மதுபானங்கள் மீதான கடுமையான தரக்கட்டுப்பாடுகளை நிலைநிறுத்த ஒரு மைய ஆய்வகத்தை நிறுவுதல்.
- மது வரி வருமான வசூலுடன் தொடர்புடைய இடர்களை இனங்காணல், மதிப்பிடல், குறைத்தல் போன்றவற்றிற்கு இடர் முகாமைத்துவப் பிரிவொன்றை நிறுவுதல்.
- நிதிப் புலனாய்வுப் பிரிவை நிறுவுதல்.
- பாதுகாப்பான பொதியிடல் அமைப்பு மூலம் சட்டப்பூர்வமாக தயாரிக்கப்பட்ட மதுபானங்களை அடையாளம் காண வடிவமைக்கப்பட்ட புதிய மொபைல் செயலி அறிமுகம்.